Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 22 ஞாயிற்றுக்கிழமை (04-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:131

# பல லட்சம் கூடுதல் வாக்குகளுடன் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னணியில்!

## ஆட்சி அமைக்க முடியுமா என்பது கேள்விக்குறி வடக்கு-கிழக்கில் தமிழ்க் கூட்டமைப்பு அமோக வெற்றி

கொழும்பு,ஏப்ரல்4

**இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் சுதந்திரக் கூட்டமைப்பு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணியை விடப் பல லட்சம் வாக்குகளைக் கூடுதலாகப் பெற்று முன்னணியில் நிற்கிறது. எனினும் அந்தக் கூட்டமைப்பால் தனித்தோ அல்லது வேறு கட்சி களின் எம்.பிக்களுடைய ஆதரவுடனோ ஆட்சி அமைக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.**

இதேவேளை -

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியிருக்கிறது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திகாமடுல்ல, திருகோணமலை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நேரடி வாக்களிப்பு மூலம் 19 ஆசனங்களும்தேசியப் பட்டியல் மூலம் இரண்டு ஆசனங்களும் கிடைக்கலாம் என்பது உறுதியாகிவிட்டது.

தமிழீழக் கோரிக்கையை முன் வைத்து 1977 பெப். தேர்தலில் போட்டியிட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களைக் கைப்பற்றியது. அதற்குப் பின்னர் இப்போதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பிரதான அங்கமாகக் கொண்ட நான்கு கட்சிகளின் கூட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இவ்வளவு கூடுதலான ஆசனங்கள் கிடைக்கின்றன.



இது தமிழ்த் தேசியத்துக்கும், புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த பிரதமர் யார்?

கொழும்பு,ஏப்.4

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெற்று வருவதை அடுத்து அந்தக் கூட்டணி ஆட்சி அமைத்தால் அடுத்த பிரதமராக வரப்போவது யார்? என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

புதிய பிரதமராக லக்ஷமன் கதிர்காமரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கக்கூடும் என்ற ஊகங்களுக்கு இடையே எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ஷவா ஜனாதிபதியின் தம்பியான அனுரா பண்டாரநாயக்கவா அடுத்த பிரதமர் என்ற குழப்பமும் நிலவுகின்றது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸவுக்கு பிரதமர் பதவியைக் கொடுக்கும்படி அந்தக் கட்சி கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றும் செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

(ம-3)

## மீண்டும் வாக்களிப்புப் பற்றி ஆராய தேர்தல் ஆணையாளர் இன்று கூட்டம்

கொழும்பு,ஏப்.4

வாக்களிப்பு நடைபெறுவதற்கு இடையூறு விளைவிக்கப்பட்ட வாக்குச் சாவடிகளில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் இன்று அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளார்.

சகல அரசியல் கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் இக்கூட்டத்துக்கு அழைத்துள்ளார்.

ஏதாவது ஒரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பு குழப்பப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டால் அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் நடந்த வாக்களிப்பு ரத்துச்செய்யப்பட்டு மீண்டும் புதிதாக வாக்கெடுப்பு நடத்தப்

(14ஆம் பக்கம் பார்க்க)










## ஈ.பி.டி.பிக்கு ஓர் ஆசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

வடக்கு - கிழக்கில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணிக்கு யாழ். மாவட்டத்தில் மட்டும் ஓர் ஆசனம் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் மொத்தமுள்ள 9ஆசனங்களில் 8ஆசனங்களை இலங்கை தமிழரசுக் கட்சி கைப்பற்ற, எஞ்சிய ஓர் ஆசனத்தை ஈ.பி.டி.பி. பெற்றது.

18,612 வாக்குகளை பெற்ற ஈ.பி.டி.பி கட்சி தமிழரசுக் கட்சியின் மிகுதி வாக்குகளிலும் பார்க்க 2ஆயிரத்து 800வாக்குகள் அதிகம் பெற்று 9 ஆவது ஆசனத்தைப் பெற்றது.



இந்தக் கட்சி போட்டியிட்ட ஏனைய மாவட்டங்கள் எதிலுமே அந்தக் கட்சி ஆசனங்கள் எவற்றையும் பெறவில்லை.

யாழ். மாவட்டத்தில் நேற்று நண்பகல் வரை 9ஆசனங்களும் தமிழரசுக் கட்சிக்கே கிடைக்கும் என்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் தமிழரசுக் கட்சிக்கு அமோக வெற்றி; 8 ஆசனங்கள் பெற்றது

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. மொத்தமுள்ள 9 ஆசனங்களில் அந்தக் கட்சி 8 ஆசனங்களை வென்றது.

மூன்று புதிய முகங்கள் உட்பட தமிழரசுக் கட்சியின் 8 வேட்பாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

வாக்குகள் எண்ணப்பட ஆரம்பித்ததில் இருந்து வாக்குகளை அள்ளிக் குவித்து வந்த அந்தக் கட்சிக்கே 9 ஆசனங்களும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு நேற்று நண்பகல் வரை இருந்தது. ஆனால், இறுதியில் 7 ஆசனங்களையும் ஒரு 'போனஸ்' ஆசனத்தையும் பெற்று 8 ஆசனங்களைக் கைப்பற்றியது அக்கட்சி. ஈ.பி.டி.பி. கடசிக்கு மிகுதி ஓர் ஆசனம் கிடைத்தது.

யாழ். தேர்தல் மாவட்ட முடிவுகள் தேர்தல் திணைக்களத்தால் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எனினும், யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரான யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நேற்று மாலை முடிவுகளை அறிவித்தார்.

விரும்பு வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாடாளுமனற உறுப்பினர்களாகத் தெரிவாவோரின் பெயர் விவரங்களும் நேற்று மாலை அறிவிக்கப்பட்டன.

விருப்பு வாக்குகளின்படி செல்வராஜா கஜேந்திரன் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 77 வாக்குகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பிடித்தார். பத்மினி சிதம்பரநாதன் 68 ஆயிரத்து 239 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

ஏனையோரின் விருப்பு வாக்கு விவரங்கள் வருமாறு:-

கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம் 60,768, கந்தையா பிரேமச்சந்திரன் - 45,783, கிட்டினன் சிவநேசன் - 43,730, நடராஜா ரவிராஜ் - 42,963, கனகலிங்கம் சிவாஜிலிங்கம் - 42,191, சோமசுந்தரம் மாவை சேனாதிராசா - 38,779.

என்.ஸ்ரீகாந்தா (33,205), சொலமன் சூ.சிறில் (31,177), சி.வி.கந்தையா சிவஞானம் (25,954), சின்னத்தம்பி சிவமகாராசா (24,964) ஆகியோர் தோல்வியடைந்தனர். வெற்றிபெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆதரவாளர்கள் நேற்று மாலையில் வெடிகளைக் கொளுத்தித் தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

(ம-3-5)

## வன்னியிலும் 5 இடங்களை தமிழரசுக் கட்சியே வென்றது

வவுனியா,ஏப்.4

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளது.

வன்னி மாவட்ட முடிவுகளை தெரிவத்தாட்சி அலுவலர் கே.கணேஷ் நேற்றிரவு அறிவித்தார். 90 ஆயிரத்து 834 வாக்குகளைப் பெற்று தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களை வென்றது.

33 ஆயிரத்து 540 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது. சுதந்திரக் கூட்டமைப்பு 7 ஆயிரத்து 340 வாக்குகளையும் புளொட் 6 ஆயிரத்து 318 வாக்குகளையும், ஈ.பி.டி.பி. ஆயிரத்து 97 வாக்குகளையும் பெற்றன.

சதாசிவம் கனகரட்ணம், சிவநாதன் கிஷோர் ஆகிய இரு புது முகங்கள் உட்பட தமிழரசுக் கட்சியின் 5 வேட்பாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகின்றனர்.

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோதராதநாதலிங்கம் ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளனர்.

ஐ.தே.முன்னணி சார்பில் கடந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## முடிவுகள் அறிவிப்பது நேற்று மாலையுடன் இடை நிறுத்தப்பட்டது!

கொழும்பு,ஏப்.4

13ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் பணி நேற்று மாலை 6.30 மணியுடன் தேர்தல் ஆணையாளரால் நிறுத்தப்பட்டது.

சில மாவட்டங்களின் வாக்குப் பதிவு குறித்து இன்று காலை கட்சிச் செயலாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் நடத்தவுள்ள கூட்டத்தையொட்டி இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சில இடங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் குறித்து தீர்க்கமான தீர்மானம் எடுக்கமுடியாமலிருப்பதே இதற்குக் காரணம் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 4 ஆசனங்கள் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்தன

### முஸ்லிம் காங்கிரஸுக்கு - 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 11 வாக்குகளைப் பெற்று தமிழரசுக் கட்சி 4 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 42 ஆயிரத்து 541 வாக்குளைப் பெற்று ஓர் ஆசனத்தைப் பெறுகின்றது.

ஸ்ரீலங்கா மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 25 ஆயிரத்து 728 வாக்குளைப் பெற்றது. இந்தக் கூட்டமைப்பில் போட்டியிட்ட முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தோல்வியடைந்தார்.

விருப்பு வாக்கில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த த.கனகசபை (57,843), செல்வி தங்கேஸ்வரி கதிர்காமன் (50,545), செ.ஜெயானந்தமூர்த்தி (44, 457), கிங்ஸ்லி ராசநாயகம்(38.633) ஆகியோர் அதிக வாக்குகளைப் பெற்று வென்றுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இந்தத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். தமிழ்த் தேசியம், வடக்கு - கிழக்கு இணைப்பு என்பவற்றை அவர் வெளிப்படையாக வலியுறுத்தி வந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நேற்று மாலை வரை தொகுதி வாரியாக வெளியான தேர்தல் முடிவுகள்

**மாவட்டம் - அம்பாந்தோட்டை**

தொகுதி - தங்காலை
★ ஐ.ம.சு.கூ. - 48,744
★ ஐ.தே.மு. - 22,472
★ தே.அ.மு. - 65
★ ஜே.சோ.கட்சி - 60

தொகுதி - முல்கிரிகல
★ ஐ.ம.சு.கூ. - 34,604
★ ஐ.தே.மு. - 22,582
★ பு.இ.மு. - 86
★ தே.ஐ.மு. - 70

தொகுதி - திஸமகாராம
★ ஐ.ம.சு.கூ. - 57,861
★ ஐ.தே.மு. - 33,449
★ தே.க.மு. - 121

**மாவட்டம் - பதுளை**

தொகுதி - பண்டாரவளை
★ ஐ.தே.மு. - 23,791
★ ஐ.ம.சு.கூ. - 21,784
★ ஹெல உறுமய - 1,343
★ தே.அ.மு. - 158

தொகுதி - வியலுவ
★ ஐ.ம.சு.கூ. - 14,805
★ ஐ.தே.மு. - 12,874
★ ஹெல உறுமய - 211

தொகுதி - வெலிமடை
★ ஐ.ம.சு.கூ. - 23,040
★ ஐ.தே.மு. - 20,441
★ ஹெல உறுமய - 775

தொகுதி - பரணகம
★ ஐ.ம.சு.கூ. - 19,946
★ ஐ.தே.மு. - 18,030
★ ஹெல உறுமய - 357
★ தேசிய லலித் மு. - 67

தொகுதி - அப்புத்தளை
★ ஐ.தே.மு. - 21,258
★ ஐ.ம.சு.கூ. - 15,499
★ ஹெல உறுமய - 639

தொகுதி - பதுளை
★ ஐ.தே.மு. - 15,725
★ ஐ.ம.சு.கூ. - 15,103
★ ஹெல உறுமய - 1,586
★ தே.அ.மு. - 45
★ தேசிய லலித் மு. - 45

தொகுதி - பசறை
★ ஐ.தே.மு. - 21,016
★ ஐ.ம.சு.கூ. - 13,779
★ ஹெல உறுமய - 279

**மாவட்டம் - கண்டி**

தொகுதி - கலகெதர
★ ஐ.தே.மு. - 16,645
★ ஐ.ம.சு.கூ. - 15,896
★ ஹெல உறுமய - 1,513

தொகுதி - கண்டி
★ ஐ.தே.மு. - 14,367
★ ஐ.ம.சு.கூ. - 7,141
★ ஹெல உறுமய - 3,959
★ பு.இ.மு. - 70

தொகுதி - பாதும்பற
★ ஐ.தே.மு. - 26,230
★ ஐ.ம.சு.கூ. - 16,071
★ ஹெல உறுமய - 2,946

தொகுதி - உடுதும்பர
★ ஐ.ம.சு.கூ. - 18,319
★ ஐ.தே.மு. - 15,285
★ ஹெலஉறுமய - 307

தொகுதி - தெல்தெனிய
★ ஐ.தே.மு. - 13,380
★ ஐ.ம.சு.கூ. - 13,321
★ ஜா.ஹெ.உ - 627

தொகுதி - குண்டசாலை
★ ஐ.தே.மு. - 24,807
★ ஐ.ம.சு.கூ. - 23,918
★ ஹெலஉறுமய - 3,896

தொகுதி - ஹரிஸ்பத்துவ
★ ஐ.தே.மு. - 46,572
★ ஐ.ம.சு.கூ. - 37,806
★ ஹெலஉறுமய - 7,079

தொகுதி - உடுநுவர
★ ஐ.தே.மு. - 23,418
★ ஐ.ம.சு.கூ. - 21,739
★ ஹெலஉறுமய - 3,678

தொகுதி - செங்கடகல
★ ஐ.தே.மு. - 22,435
★ ஐ.ம.சு.கூ. - 17,403
★ ஹெலஉறுமய - 6,191

**மாவட்டம் - இரத்தினபுரி**

தொகுதி - இரத்தினபுரி
★ ஐ.ம.சு.கூ. - 37,386
★ ஐ.தே.மு. - 29,670
★ ஜா.ஹெ 2 - 5,605

தொகுதி - பலாங்கொட
★ ஐ.ம.சு.கூ. - 32,042
★ ஐ.தே.மு. - 27,685
★ ஜா.ஹெ 2 - 2,364

தொகுதி - எஹலியகொட
★ ஐ.ம.சு.கூ. - 31,341
★ ஐ.தே.மு. - 24,934
★ ஹெல உறுமய - 3,142

தொகுதி - நிவித்திகல
★ ஐ.ம.சு.கூ. - 32,331
★ ஐ.தே.மு. - 25,321
★ ஹெல உறுமய - 1,076
★ பு.இ.மு. - 95
★ ஐ.சோ.க - 86

தொகுதி - கலவான
★ ஐ.ம.சு.கூ. - 22,501
★ ஐ.தே.மு. - 15,726
★ ஹெல உறுமய - 440
★ தேசிய லலித் மு. - 64
★ தே.ஐ.மு. - 43

தொகுதி : ரக்குவான
★ ஐ.ம.சு.கூ. - 29,509
★ ஐ.தே.மு. - 28,453
★ ஹெலஉறுமய - 1,644

தொகுதி - பெல்மதுள்ள
★ ஐ.ம.சு.கூ - 23,403
★ ஐ.தே.மு. - 22,745
★ ஹெல உறுமய - 1,979

தொகுதி - கொலன்ன
★ ஐ.ம.சு.கூ - 48,051
★ ஐ.தே.மு. - 28,117
★ ஹெலஉறுமய - 3,249

**மாவட்டம் - மொனராகலை**

தொகுதி - மொனராகலை
★ ஐ.ம.சு.கூ - 34,503
★ ஐ.தே.மு. - 21,593
★ ஹெலஉறுமய - 586

தொகுதி - வெல்லவாய
★ ஐ.ம.சு.கூ. - 51,137
★ ஐ.தே.மு. - 29,102
★ ஹெல உறுமய - 1,618

தொகுதி - பிபிலை
★ ஐ.ம.சு.கூ. - 27,149
★ ஐ.தே.மு. - 17,859
★ ஹெல உறுமய - 293

**மாவட்டம் - காலி**

தொகுதி - கரந்தெனிய
★ ஐ.ம.சு.கூ. - 29,807
★ ஐ.தே.மு. - 14,377
★ ஹெல உறுமய - 1,187

தொகுதி - ஹபராதுவ
★ ஐ.ம.சு.கூ. - 30,648
★ ஐ.தே.மு. - 19,417
★ ஹெல உறுமய - 1,667

தொகுதி - அக்மீமன
★ ஐ.ம.சு.கூ. - 30,897
★ ஐ.தே.மு. - 21,249
★ ஹெல உறுமய - 3,095

தொகுதி - ஹெந்தற
★ ஐ.ம.சு.கூ. - 34,840
★ ஐ.தே.மு. - 22,240
★ ஜா.ஹெ 2 - 2,411

**மாவட்டம் - பொலன்னறுவை**

தொகுதி - மின்னேரியா
★ ஐ.ம.சு.கூ. - 30,342
★ ஐ.தே.மு. - 17,522
★ ஹெல உறுமய - 850
★ ஐ.சோ.க. - 152

தொகுதி - மெதிரிகிரிய
★ ஐ.ம.சு.கூ. - 26,114
★ ஐ.தே.மு. - 20,522
★ ஹெல உறுமய - 388
★ சோசலிசக்கட்சி - 182
★ தே.அ.மு. - 23

தொகுதி - பொலன்னறுவை
★ ஐ.ம.சு.கூ. - 45,936
★ ஐ.தே.மு. - 35,420
★ ஹெலஉறுமய - 1,067
★ சோசலிசக்கட்சி - 290
★ தே.அ.மு. - 59

தொகுதி - பத்தேகம
★ ஐ.ம.சு.கூ. - 35,936
★ ஐ.தே.மு. - 24,572
★ ஹெலஉறுமய - 1,368

தொகுதி - ரத்கம
★ ஐ.ம.சு.கூ - 29,413
★ ஐ.தே.க - 19,408
★ ஹெலஉறுமய - 2,267

**மாவட்டம் - மாத்தறை**

தொகுதி - அக்குரஸ
★ ஐ.ம.சு.கூ. - 35,747
★ ஐ.தே.மு. - 21,318
★ ஹெல உறுமய - 1,733

தொகுதி - தெவிநுவர
★ ஐ.ம.சு.கூ. - 30,360
★ ஐ.தே.மு. - 16,473
★ ஹெலஉறுமய - 2,331
★ ஐ.சோ.க. - 148

தொகுதி - வெலிகம
★ ஐ.ம.சு.கூ. - 34,824
★ ஐ.தே.மு. - 19,996
★ ஹெலஉறுமய - 2,462
★ ஐ.சோ.க. - 204

தொகுதி - தெனியாய
★ ஐ.ம.சு.கூ. - 33,051
★ ஐ.தே.மு. - 23,262
★ ஹெலஉறுமய - 1,197

தொகுதி - ஹக்மன
★ ஐ.ம.சு.கூ. - 34,158
★ ஐ.தே.மு. - 18,582
★ ஹெலஉறுமய - 1,421

**மாவட்டம் - மாத்தளை**

தொகுதி - மாத்தளை
★ ஐ.தே.மு. - 24,058
★ ஐ.ம.சு.கூ. - 18,496
★ ஹெலஉறுமய - 3,135

தொகுதி - தம்புள்ள
★ ஐ.ம.சு.கூ. - 40,616
★ ஐ.தே.மு. - 29,456
★ ஹெலஉறுமய- 1,982
★ ஐ.சோ.க. - 264

தொகுதி - ரத்தோட்ட
★ ஐ.தே.மு. - 25,330
★ ஐ.ம.சு.கூ. - 22,747
★ ஹெல உறுமய - 2,611

தொகுதி - லக்கல
★ ஐ.ம.சு.கூ. - 21,307
★ ஐ.தே.மு. - 18,784

**மாவட்டம் - அனுராதபுரம்**

தொகுதி - மிகிந்தலை
★ ஐ.ம.சு.கூ. - 21,008
★ ஐ.தே.மு. - 14,336
★ ஜா.ஹெல - 602

தொகுதி - அனுராதபுரம் மேற்கு
★ ஐ.ம.சு.கூ. - 28,821
★ ஐ.தே.மு. - 23,876
★ ஜா.ஹெ - 1,260

தொகுதி - மதவாச்சி
★ ஐ.ம.சு.கூ - 27,978
★ ஐ.தே.மு. - 17,859
★ ஹெல உறுமய - 484
★ ஏனையவை - 302

தொகுதி - கெக்கிராவை
★ ஐ.ம.சு.கூ. - 24,446
★ ஐ.தே.மு. - 19,606
★ ஹெலஉறுமய - 1,165

தொகுதி - அநுராதபுரம் கிழக்கு
★ ஐ.ம.சு.கூ. - 30,591
★ ஐ.தே.மு. - 20,623
★ ஹெலஉறுமய - 2,045

தொகுதி - ஹொரவபொத்தானை
★ ஐ.ம.சு.கூ. - 24,924
★ ஐ.தே.மு. - 18,231
★ ஹெலஉறுமய - 500

தொகுதி - கலாவெவ
★ ஐ.ம.சு.கூ. - 42,639
★ ஐ.தே.மு. - 26,744
★ ஹெலஉறுமய - 1,314

**மாவட்டம் - புத்தளம்**

தொகுதி - ஆனமடுவ
★ ஐ.ம.சு.கூ. - 33,715
★ ஐ.தே.மு. - 22,547
★ ஹெல உறுமய - 1,231

தொகுதி - சிலாபம்
★ ஐ.ம.சு.கூ. - 31,124
★ ஐ.தே.மு. - 29,934
★ ஜா.ஹெ 2 - 2,352

தொகுதி - புத்தளம்
★ ஐ.தே.மு. - 34,273
★ ஐ.ம.சு.கூ. - 20,069
★ ஹெலஉறுமய - 303

தொகுதி - வென்னப்புவ
★ ஐ.ம.சு.கூ. - 29,042
★ ஐ.தே.மு. - 25,378
★ ஹெலஉறுமய - 3,208

தொகுதி - நாத்தாண்டியா
★ ஐ.ம.சு.கூ. - 25,270
★ ஐ.தே.மு - 20,461
★ ஹெலஉறுமய - 2,466

**மாவட்டம் - கேகாலை**

தொகுதி - அரநாயக்க
★ ஐ.ம.சு.கூ. - 16,915
★ ஐ.தே.மு. - 15,321
★ ஜா.ஹெ - 1,458

தொகுதி - ரம்புக்கணை
★ ஐ.ம.சு.கூ. - 22,187
★ ஐ.தே.மு. - 16,858
★ ஹெலஉறுமய - 2,256

தொகுதி - தெரணியகல
★ ஐ.ம.சு.கூ. - 20,436
★ ஐ.தே.மு. - 18,881
★ ஹெலஉறுமய - 824

தொகுதி - மாவனல்ல
★ ஐ.தே.மு. - 26,099
★ ஐ.ம.சு.கூ - 23,290
★ ஹெலஉறுமய - 3151

தொகுதி - கல்கமுவ
★ ஐ.ம.சு.கூ. - 22,980
★ ஐ.தே.மு - 18,693
★ ஹெலஉறுமய - 1,715

தொகுதி - டெடிகம
★ ஐ.ம.சு.கூ - 28,964
★ ஐ.தே.மு - 26,328
★ ஹெலஉறுமய - 2,095

தொகுதி - எட்டியாந்தோட்டை
★ ஐ.ம.சு.கூ - 22,081
★ ஐ.தே.மு - 21,500
★ ஹெலஉறுமய - 1,083

தொகுதி - தெதிகம
★ ஐ.ம.சு.கூ - 28,964
★ ஐ.தே.மு - 26,328
★ ஹெலஉறுமய - 2,095

தொகுதி - தெவிநுவர
★ ஐ.ம.சு.கூ. - 24,746
★ ஐ.தே.மு. - 19,950
★ ஹெலஉறுமய - 176

தொகுதி - கேகாலை
★ ஐ.ம.சு.கூ. - 23,778
★ ஐ.தே.மு. - 17,509
★ ஹெலஉறுமய - 2,834

தொகுதி - ரம்புக்கணை
★ ஐ.ம.சு.கூ. - 22,187
★ ஐ.தே.மு. - 16,858
★ ஹெலஉறுமய - 2,256

**மாவட்டம் - நுவரெலியா**

தொகுதி - வலப்பனை
★ ஐ.தே.மு. - 22,768
★ ஐ.ம.சு.கூ. - 20,607
★ மலையக ம.மு. - 3,170
★ ஜா.ஹெ2 - 395

**மாவட்டம் - களுத்துறை**

தொகுதி - பாணந்துறை
★ ஐ.ம.சு.கூ. - 35,687
★ ஐ.தே.மு. - 24,020
★ ஜா.ஹெ 2 - 14,274
★ பு.இ.மு. - 113

தொகுதி - அகலவத்தை
★ ஐ.ம.சு.கூ. - 33,939
★ ஐ.தே.மு. - 26,456
★ ஹெலஉறுமய - 2,538
★ ஐ.சோ.க. - 16

தொகுதி - கொறனை
★ ஐ.ம.சு.கூ. - 38,421
★ ஐ.தே.மு. - 26,764
★ ஹெலஉறுமய - 7,166

தொகுதி - பேருவளை
★ ஐ.ம.சு.கூ. - 33,583
★ ஐ.தே.மு. - 30,210
★ ஹெல உறுமய - 6,751

தொகுதி - பாணந்துறை
★ ஐ.ம.சு.கூ. - 35,687
★ ஐ.தே.மு. - 24,020
★ ஹெலஉறுமய - 14,274
★ பு.இ.மு. - 113

தொகுதி - புளத்சிங்கள
★ ஐ.ம.சு.கூ. - 25,374
★ ஐ.தே.மு. - 22,767
★ ஹெலஉறுமய - 2,621

தொகுதி - பண்டாரகம
★ ஐ.ம.சு.கூ. - 41,850
★ ஐ.தே.மு. - 27,240
★ ஹெலஉறுமய - 8,989

தொகுதி - மத்துகம
★ ஐ.ம.சு.கூ. - 36,294
★ ஐ.தே.மு. - 24,912
★ ஹெலஉறுமய - 4,542

**மாவட்டம் - கம்பஹா**

தொகுதி - ஜா-எல
★ ஐ.ம.சு.கூ - 42,453
★ ஐ.தே.மு - 34,248
★ ஹெலஉறுமய - 6,009

தொகுதி - வத்தளை
★ ஐ.தே.மு - 34,041
★ ஐ.ம.சு.கூ - 28,344
★ ஹெலஉறுமய - 4,525

தொகுதி - தொம்பே
★ ஐ.ம.சு.கூ - 40,327
★ ஐ.தே.மு - 23,111
★ ஹெலஉறுமய - 5,943

தொகுதி - மஹர
★ ஐ.ம.சு.கூ - 47,558
★ ஐ.தே.மு - 27,012
★ ஹெலஉறுமய - 11,194

தொகுதி - கட்டான
★ ஐ.ம.சு.கூ. - 41,823
★ ஐ.தே.மு. - 31,919
★ ஹெல உறுமய - 6,254

தொகுதி - திவிலுப்பிட்டிய
★ ஐ.ம.சு.கூ. - 34,257
★ ஐ.தே.மு. - 26,267
★ ஹெலஉறுமய - 5,666

தொகுதி - நீர்கொழும்பு
★ ஐ.ம.சு.கூ. - 24,357
★ ஐ.தே.மு. - 33,709
★ ஹெலஉறுமய - 1,759

தொகுதி - களனி
★ ஐ.ம.சு.கூ. - 25,774
★ ஐ.தே.மு. - 21,450
★ ஹெலஉறுமய - 10,956

தொகுதி - பியகம
★ ஐ.ம.சு.கூ. - 34,502
★ ஐ.தே.மு. - 24,696
★ ஹெலஉறுமய - 11,434

தொகுதி - மினுவாங்கொட
★ ஐ.ம.சு.கூ. - 41,026
★ ஐ.தே.மு. - 28,632
★ ஹெலஉறுமய - 9,292

தொகுதி - அத்தனகல்ல
★ ஐ.ம.சு.கூ. - 45,529
★ ஐ.தே.மு. - 24,282
★ ஹெலஉறுமய - 8,742

தொகுதி - கம்பஹா
★ ஐ.ம.சு.கூ. - 51,944
★ ஐ.தே.மு. - 24,652
★ ஹெலஉறுமய - 11,357

**மாவட்டம் - கொழும்பு**

தொகுதி - தெஹிவளை
★ ஐ.தே.மு. - 19,865
★ ஐ.ம.சு.கூ. - 12,577
★ ஹெல உறுமய - 9,247
★ பு.இ.மு. - 112

தொகுதி - ஹோமாகம
★ ஐ.ம.சு.கூ. - 49,520
★ ஐ.தே.மு. - 29,029
★ ஹெல உறுமய - 17,768

தொகுதி - மொறட்டுவ
★ ஐ.ம.சு.கூ. - 38,833
★ ஐ.தே.மு. - 34,313
★ ஹெல உறுமய - 13,493

தொகுதி - கெஸ்பேவ
★ ஐ.ம.சு.கூ. - 45,939
★ ஹெலஉறுமய - 29,850
★ ஐ.தே.மு. - 26,302

தொகுதி - அவிசாவளை
★ ஐ.ம.சு.கூ. - 37,380
★ ஐ.தே.மு. - 28,607
★ ஹெலஉறுமய - 5,952
★ பு.இ.முன்னணி - 133

தொகுதி - கடுவெல
★ ஐ.ம.சு.கூ. - 53,065
★ ஐ.தே.மு. - 32,772
★ ஹெலஉறுமய - 18,485

தொகுதி - கொலன்னாவை
★ ஐ.ம.சு.கூ - 32,976
★ ஐ.தே.மு - 29,540
★ ஹெலஉறுமய - 14,311

தொகுதி - கோட்டே
★ ஐ.ம.சு.கூ - 20,070
★ ஐ.தே.மு - 19,635
★ ஹெலஉறுமய - 13,192

தொகுதி - கொழும்பு மத்தி
★ ஐ.தே.மு. - 71,599
★ ஐ.ம.சு.கூ. - 17,681
★ ஹெலஉறுமய - 8,881

**மாவட்டம் - குருநாகல்**

தொகுதி - குருநாகல்
★ ஐ.ம.சு.கூ. - 23,472
★ ஐ.தே.மு. - 23,242
★ ஹெலஉறுமய - 5,347

தொகுதி - தொடஹ்கஸ்லங்க
★ ஐ.ம.சு.கூ. - 22,426
★ ஐ.தே.மு. - 18,073
★ ஹெலஉறுமய - 1,138
★ ஐ.சோ.க. - 148

தொகுதி - வாரியப்பொல
★ ஐ.ம.சு.கூ. - 24,886
★ ஐ.தே.மு. - 19,554
★ ஹெலஉறுமய - 1,569

தொகுதி - மாவத்தகம
★ ஐ.ம.சு.கூ. - 24,974
★ ஐ.தே.மு. - 23,158
★ ஹெலஉறுமய - 3,391

தொகுதி - கல்கமுவ
★ ஐ.ம.சு.கூ. - 36,037
★ ஐ.தே.மு. - 25,377
★ ஹெலஉறுமய - 795

தொகுதி - பெல்கலவெல
★ ஐ.ம.சு.கூ. - 24,473
★ ஐ.தே.மு. - 20,435
★ ஹெலஉறுமய - 3,237

தொகுதி - பங்கிரிய
★ ஐ.ம.சு.கூ. - 26,607
★ ஐ.தே.மு. - 25,167
★ ஹெலஉறுமய - 2,740

(13ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட ரீதியான முடிவுகள்

13ஆவது நாடாளுமன்றத்துக்காக நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட முடிவுகளின் விவரம் இங்கே தரப்படுகிறது.

நேற்று மாலை 6.30 மணிவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட தகவல்களுக்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 39 லட்சத்து 66ஆயிரத்து 962 வாக்குகளைப் பெற்று முன்னிலை வகிக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி 31 லட்சத்து 85 ஆயிரத்து 679 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும் - தேசிய ஹெலஉறுமய 5 லட்சத்து 33ஆயிரத்து 852 வாக்குகளைப் பெற்று 3ஆவது இடத்திலும் உள்ளன. வடக்கு - கிழக்கில் போட்டியிட்ட இலங்கை தமிழரசுக் கட்சி 4 லட்சத்து 97 ஆயிரத்து 758 வாக்குகளைப் பெற்று 4 ஆவது இடத்திலும் உள்ளது.

பதுளை
★ ஐ.தே.மு. - 1,81,705 - 5
★ ஐ.ம.சு.கூ. - 1,78,634 - 3

மொனராகலை
★ ஐ.ம.சு.கூ. - 1,17,456 - 3
★ ஐ.தே.மு. - 71,067 - 2

பொலநறுவை
★ ஐ.ம.சு.கூ. - 1,06,243 - 3
★ ஐ.தே.மு. - 75,664 - 2

அம்பாந்தோட்டை
★ ஐ.ம.சு.கூ. - 1,78,895 - 5
★ ஐ.தே.மு. - 98,877 - 2

மாத்தளை
★ ஐ.ம.சு.கூ. - 1,08,259 - 3
★ ஐ.தே.மு. - 1,00,642 - 2

மாத்தறை
★ ஐ.ம.சு.கூ. - 2,41,235 - 5
★ ஐ.தே.மு. - 1,39,633 - 3
★ ஹெலஉறுமய- 16,229 - 0

புத்தளம்
★ ஐ.ம.சு.கூ. - 1,42,784 - 5
★ ஐ.தே.மு. - 1,35,152 - 3
★ ஹெலஉறுமய- 10,000 - 0

கம்பஹா
★ ஐ.ம.சு.கூ. - 5,09,963 - 9
★ ஐ.தே.மு. - 3,67,572 - 6
★ ஹெலஉறுமய- 1,02,516 - 2
★ ஐ.சோ.க. - 2,852 - 0

கேகாலை
★ ஐ.ம.சு.கூ. - 2,14,267 - 5
★ ஐ.தே.மு. - 1,86,641 - 4
★ ஹெலஉறுமய- 18,034 - 0

களுத்துறை
★ ஐ.ம.சு.கூ. - 2,91,208 - 6
★ ஐ.தே.க. - 2,12,721 - 3
★ ஹெலஉறுமய - 56,615 - 1
★ இடதுசாரி - 560 - 0
★ ஐ.சோ.க - 432 - 0

| | | | |
|---|---|---|---|
| சூ. ▲ புத. | ராகு | செவ். வெ. | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | | கே. | சந். |

# இந்த வார இராசி பலன்

## 04-04-2004 - 10-04-2004

### மாற்றம்

04.04.2004 உத்தரம் - கன்னி ராசியில் சந்திரன் நிற்கும்.

தமிழ் அரசியல் கட்சிகளின் உதவியுடன் புதிய அரசு ஆட்சி அமைக்கும். விட்டுவிட்டு அபிப்பிராயபேதம் கொடுக்கும். இந்தியாவில் பழைய அரசு ஆட்சி அமைக்கும். வன்செயல்கள் அதிகரிக்கும். ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்கம் அதிகரிக்கும். இஸ்ரேல், பலஸ்தீனம் அடிபாடுகள் தீவிரமாகும். அமெரிக்காவில் தீவிரவாதச் செயல் மேலும் தீவிரமடையும். இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் வெப்பநிலை அதிகரிக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

எதிர்ப்பாலாரால் தொல்லைகள் ஏற்படும். தனித்தன்மையால் புகழ் அடைவீர்கள். பொருள் வரும். இடமாற்றத்திற்கான அழைப்பு வரும். வீடு, வாகன சுகம் கிடைக்கும். தொழில ஸ்தானத்தில் புகழ்வரும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். அரசியல்வாதிகள் உதவிகள் செய்வார்கள். கண்நோ, தலைவிறைப்பு, உஷ்ணபீடைகள் கொடுக்கும். வியாபாரிகள், நிர்வாகப்பீடத்தவர், மருத்துவத்தொழில் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன் , வெள்ளி, சனி.*

### இடபம்

அன்பாகப் பேசிக் காரிய மாற்றுவீர்கள். சகோதரங்களுக்காக ஓடியாடித் திரிந்து கரும மாற்றுவீர்கள். சுபகாரியங்கள் சிலருக்கு நிறைவேறும். பித்தக் கொதிப்பு, களைப்பு, உஷ்ணபீடைகளால் வருந்துவீர்கள். புதிய பிரயாணம், வாகன சுகம் கொடுக்கும். மறைமுக எதிரிகளை அறிந்து எதிர்த்தாக்கம் கொடுப்பீர்கள். எதிர்ப்பாலாரோடு கருத்து வேற்றுமைப்படுவீர்கள். செய்தித்துறை, பத்திரிகைத்துறை, அரசியல்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

தொழில்நிலையில் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். பணம் வரும். பேச்சுவாக்கால் காரிய மாற்றுவீர்கள். சகோதரங்களுடன் கருத்துவேற்றுமை வரும். புதிய திட்டத்தால் நஷ்டம் அடைவீர்கள். ஏன் அவசரப்பட்டு தவறுகள் விடுகின்றீர்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும் செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, குருத்துறையினர்களுக்குப் பல மாற்றங்கள் ஏற்படும். வாய்வுத் தொல்லை, நெஞ்செரிவுக்கு வைத்தியம் செய்துவரவும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### கடகம்

சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்கள் சிலருக்குக் கொடுக்கும் பொருள வரவு கொடுக்கும். புதிய நண்பர்கள் வருவர். முயற்சி ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். பொதுத் தொண்டு அரசியல்வாதிகளுக்கு நற்பலன்கள் கிடைக்கும். வாய்வுத் தொல்லை, சளி, கைகால் விறைப்பு என்பன கொடுக்கும். வியாபாரிகள், குருத்தொழில் செய்பவர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### சிங்கம்

தடுமாற்றமான காலமாகும். தெய்வபக்தியால் நன்மைகள் கொடுக்கும். பணவரவு கொடுக்கும். மேலதிகாரிகள் வாழ்த்துவார்கள். புதிய பொறுப்புக்கள் வரும். இடமாற்றங்கள் நன்மை கொடுக்கும். மாமன் முறையானவர்கள் நன்மை அடைவார்கள். நெஞ்சுநோ, உஷ்ணபீடைகள் கொடுக்கும். வியாபாரிகள், மருந்துத்துறையினர், அரசியல்வாதிகள், குருத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### கன்னி

ஒவ்வொரு மனிதனுக்கும் காதல் உணர்வு உள்ளது. அதனால்தான் அவன் திருப்தியான வாழ்வு அடைகின்றான். சிலருக்கு மட்டும் கொஞ்சம் கூடிவிடுகின்றது. அன்புமயமாக நீங்கள் பிறருக்கு உதவியபடி இருப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். இடுப்புநோ, கிருமித் தாக்கம், மூலநோ என்பன கொடுக்கும். பணவரவு அதிகரிக்கும். விவசாயத்துறை, எண்ணெய்த்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

சட்டம் பேசி வாழ முடியுமா? சட்டத்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு இலாபகரமாக வருமானம் கொடுக்கும். மேலதிகாரிகள் நன்மை செய்வார்கள். இடமாற்றங்கள் நன்மைதரும். பொருள் ரீதியிலான யோசனை கொடுக்கும். சிலருடைய பணம் உங்கள் கைகளுக்கு வந்து சேரும். நரம்பு உளைவு, கிட்னி வருத்தம், குடல் உபாதைகள் கொடுக்கும். சட்டத்துறை, அரசியல்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

### விருச்சிகம்

இது போராட்டமான இராசியமாகும். குடும்பத்தில் எதிர்பாலாருக்கு சில அசம்பாவிதப் பிரச்சினைகளால் மனக் கஷ்டங்கள் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். பணவரவு குறையும். விறைப்பு, சல, உஷ்ண பீடைகள் கொடுக்கும். இரும்பு வியாபாரிகள், வாகனப் போக்குவரத்துத்துறை, அரசியல்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### தனுசு

மனித வாழ்வு போராட்ட மயமானது. எதையும் எதிர்கொள்ள வேண்டும். பணவரவு அதிகரிக்கும். தொழில் நிலையில் நன்மையான மாற்றங்கள் கொடுக்கும். கண்ணில் மங்கல்வர இடம் உண்டு. கைகால் பிடிப்பு, வாய்வுத் தொல்லை கொடுக்கும். புத்திரர்கள் உதவி செய்வார்கள். வியாபாரிகள், குருத்தொழில், மருந்துடன் சம்பந்தப்பட்டவர்கள் உதவகள் செய்வார்கள். இடமாற்றங்களைக் கண்டபடி செய்ய வேண்டாம்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

அயலவர்கள் வீண் பகைகளை ஏற்படுத்துவார்கள். அட்டமத்தில் வியாழன் விரயத்தைக் கொடுக்கவல்லது. வெளிநாட்டுச் சம்பந்தம் அல்லது பிரயாணங்களைக் கொடுக்கவல்லது. பொருளால் வேதனைவரும். இடமாற்றங்கள் சிலருக்கு மனக்கவலையைக் கொடுக்கும். நரம்பு வருத்தம், மனக்குழப்பம், தோல், மூட்டுவலி என்பன கொடுக்கும். சந்தைத்துறை, குருத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### கும்பம்

கலை ஒருவருக்கு கேட்டு வருவதல்ல, லட்சத்தில் ஒருவருக்கு அந்தக் கலை வேகம் எப்படி வருகின்றது. பொருள் ...ாரத்தைக் கடந்த அந்தக் கலை உங்களுக்கும் வருகி... ...சியல் வாதிகளின் உதவிகள் கிடைக்கும். பணவரவு ஏ... தூரத்து உறவினர்கள் வருவார்கள். பணவரவு சுமாராக இருக்கும். பொருள்களை மறந்து விட்டுவிட்டுக் கவலைப்படுவீர்கள். கால்வீக்கம், பிறசர், சலவருத்தம் என்பன கொடுக்கும் குருத்துறை, சட்டத்துறை, அரசியல்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். இடமாற்றங்கள் கொடுக்கும். பணவரவு ஏற்படும். தூர இடங்களிலிருந்து செய்திகளோ பிரயாணங்களோ வரஇடமுண்டு. பொருள்கள் தவற இடமுண்டு. இரத்த நோய்கள் வரஇடமுண்டு. கொடுக்கல் வாங்கலால் பிரச்சினைகள் வரஇடம் உண்டு. மருந்து வியாபாரம், சந்தை வியாபாரம், குருத்தொழில் சிறப்பு அடைய இடம் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

---

# தவக்காலத்தில் எமது உள்ளத்தை புதிய ஆலயமாக மாற்றுவோம்

இன்று குருத்தோலை ஞாயிறு. தவக்காலத்தின் உச்சக்கட்டமான ஆண்டவரின் பாஸ்கா மறைநிகழ்ச்சிகளைக் கொண்டாடும் பரிசுத்த வாரத்தில் இன்று அடி எடுத்து வைக்கிறோம். இயேசு தம்முடைய பாடுகள் - மரணம் - உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறை நிகழ்ச்சிகளைக் கொண்டாட ஜெருசலேமுக்கு வந்ததை இன்று நாம் நினைவு கூருகிறோம்.

இயேசுவின் வாழ்வில் நடந்த மகிமைமிக்க சம்பவம் இது. இதனை மாற்குவின் (11:1-10) நற்செய்தியில் நாம் படிக்கின்றோம். இயேசு ஜெருசலேமை நெருங்கிவந்துவிட்டார். இரண்டு சீடர்களை அழைக்கிறார். எதிரே இருக்கும் ஊருக்குள் போய் இதுவரை யாரும் ஏறாத கழுதைக் குட்டியைக் கொண்டு வாருங்கள் என்று தம் இறுதிப் பயணத்துக்கு ஆயத்தம் செய்கிறார். சீடர்கள் கழுதைக் குட்டியைக் கொண்டுவந்து தம் போர்வைகளை அதன்மேல் போட்டு

**ஞாயிறு நற்பிரசாதம்**

இயேசுவை அமரச் செய்கிறார்கள். வேறு சிலர் வயல் வெளிகளில் இலை தளைகளை வெட்டி வழிகளில் பரப்பி "தாவீதின் மக்களுக்கு ஓசான்னா" என்று ஆர்ப்பரித்துக் கொண்டு முன் செல்கிறார்கள்.

ஜெருசலேம் யூதர்களுக்கு மிக முக்கியமான இடம். அங்கிருக்கும் ஜெருசலேம் தேவாலயம், அவர்களை எப்போதும் இணைக்கும் ...மாக விளங்கியது. யூதர்கள் ... பாஸ்கா கடமைகளை நிறைவேற்ற ஜெருசலேமுக்குப் போவது வழக்கம் இயேசுகூட பலமுறை போயிருக்கிறார். ஆனால், இம்முறை இயேசுவுக்கு இந்த ஜெருசலேம் பயணம் வித்தியாசமானது. கால்நடையாகப் போகும் ஜெருசலேம் யாத்திரையை இயேசு கழுதை மீது நடத்துகிறார். குதிரை மீது ஏறிப் போர் வீரன் போலவோ, அரசன் போலவோ போகவில்லை. கழுதை மீது ஏறி



அமைதியாகப் போகிறார்.

யூதர்கள் பாஸ்கா விழாவைக் கொண்டாட ஜெருசலேமுக்குப் போவார்கள். அங்கு இயேசுவும் போய் இருக்கிறார். தன்னுடைய பாஸ்கா விழாவில், தன்னையே செம்மறியாக அர்ப்பணிக்கும் புதிய பாஸ்கா விழாவுக்குப் போகிறார். யூதர்கள் மெசியாவை நீண்டகாலம் எதிர்பார்த்திருந்தார்கள். மகிமையிலும் மாட்சிமையிலும் வரும் அரசனாக எதிர்பார்த்தார்கள் ஆனால், இயேசுவோ அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வரும் ஆன்மீக அரசராகக் குதிரை மேல் அல்ல கழுதைமேல் வருகிறார். அவரை ஏற்றுக்கொள்வது அவர்களுக்குக் கஷ்டமாகிறது.

ஒலிவமலைத் தோப்பு ஊடாகப் பவனி போகும்போதுதான் மக்கள் கூட்டம் அங்கிருந்து ஒலிவ மரக்கிளைகளை முறித்து வானை நோக்கி உயர்த்திப் பிடித்து மெதுவாக அசைத்தவர்களாக "ஓசான்னா ஓசான்னா" என்று ஆர்ப்பரிக்கிறார்கள். எங்களிடம் ஒலிவ் மரங்கள் இல்லை. நாம் தென்னங்குருத்துகளை அசைத்து "ஓசான்னா ஓசான்னா" என்று பாடிக் கொண்டு இயேசுவின் பாடுகள் - மரணம் - உயிர்ப்பு என்னும் பாஸ்கா விழாக் கொண்டாட்டங்களைத் தொடக்கி வைக்க எமது புதிய 'ஜெருசலேம்' ஆலயத்தில் நுழைகிறோம். எமது உள்ள ஆலயத்தில் நுழைகிறோம்.

'ஓசான்னா' என்ற எபிரேயச் சொல்லுக்குக் 'காப்பாற்றும்' என்ற

**அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

பொருள் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டது. இப்போது வாழ்க - போற்றி என்ற கருத்துக் கொடுக்கப்படுகிறது. இந்தத் தவக்காலத்தில் எமது உள்ளம் புதிய ஆலயமாக ஆயத்தப் படுத்தப்பட்டுள்ளது. "வாழ்க ஓசான்னா" அரசே வாரும், எமக்கும் எம் மண்ணுக்கும் சமாதானம் தாரும் என்று நாமும் பாடுவோம். ★

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

இளவாலை றோ.க.த.ஆண்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-8)



வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் இராசசிங்கம், மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் பி.அச்சுதம்பிள்ளை ஆகியோரைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் வரவேற்று அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். *(படம்: வலி.மேற்குச் செய்தியாளர்)*



வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் சு.ஜெயராஜ் மங்கலவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (எ-4)





சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

சம்புரோக்ஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேக பெருஞ் சாந்திவிழா

## சிறப்பு மலர் 04. 04. 2004

## ஆதீன முதல்வரின் அருளாசி



கோண்டாவில் தில்லையம்பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீசிவகாமி அம்பாளுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதை யிட்டு பெருமகிழ்ச்சியடை கின்றோம்.

உலக நாயகியாகிய அம்பிகை இங்கு சிவகாமியாக எழுந்தருளி பால்நினைந்தூட்டும் தாயினைப் போல பக்தர்கள் வேண்டுதல் அறிந்து அருள்பாலிக்கின்றாள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறு கின்ற மஹாகும்பாபிஷேகம் இத்தலத்தில் நடைபெறுவது தலத்திற்கும், ஊருக்கும், ஊர்வாழ் மக்களுக்கும் புனிதத்தைத் தருவதாகும். அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்பார்கள். அன்னையின் அருளுக்குத்தான் ஓர் எல்லையுண்டோ? எனவே அம்பிகையை வழிபட்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

மனிதனை மனிதனாக மாற்றுவது இறைவழிபாடாகும். பிறத்தற்கரிய மானிடப் பிறப்பினைப் பெற்ற நாங்கள் வாழும் காலத்திலேயே புண்ணியத்தினைத் தேடிக்கொள்ள வேண்டும். இறைபணியாற்றல் இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தைத் தருவதாகும்.


இவ்வகையில் இக் கும்பாபிஷேகத்தை நடத்துகின்ற ஆலயபரிபாலன சபையினரையும் சிவாசாரியார்களையும் கோண்டாவில் வாழ் மக்களையும் இறைவன் ஆசீர்வதிப்பானாக. வெளிவருகின்ற "அம்மன் களஞ்சியம்" மலர் சிறந்த முறையில் வெளிவரவும் மலரின் மலர்விற்குப் பணியாற்றிய மலர் குழுவிற்கும் இறைவனது ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.
நல்லை ஆதீன முதல்வர்,
2 ஆவது குருமாகசந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.



## அருள் ஆசி



இறைவனோடு இணைந்த சக்தியாக விளங்கும் சிவகாமசுந்தரி அம்பாள் கோண்டாவில் தில்லையம்பதியில் அருளாட்சி செய்து பக்தர்களுக்கு அருளை வாரி வழங்கிய வண்ணம் இருப்பதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம்.

இன்று அம்பாளின் அடியவர்களால் மனமுவந்து வழங்கிய பெரும் பொருள் கொண்டு ஆலயத்தைப் புதுப்பொலிவோடு மிளிரச்செய்துள்ளமை மிகவும் போற்றுதற்குரிய செயலாகும். அத்தோடு, இந்த சம்புரோக்ஷண மஹாகும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழாவிலே கலந்து அம்பாளைத் தரிசித்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னையின் பேரருள் கிடைக்கும் என்பதிலும் ஐயம் இல்லை.

கோண்டாவில் தில்லைம்பதியில் ஒரு சிறப்பு என்னவென்றால் அன்னை தனியாகவும் இறைவனுடன் இணைந்தும் அடியார்களுக்கு அருள் பாலிப்பதேயாகும். இது எமக்கெல்லாம் கிடைத்த பெரும் பேறாகும். இன்றைய பங்குனி உத்தர நன்னாளில் அடியார்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வர நடராஜப்பெருமான் அருளும் தில்லையம் பதியாளாம் சிவகாமியின் திருவருளும் நிறைந்து விளங்கப் பிரார்த்தித்து ஆசி வழங்கி மகிழ்கின்றோம்.

"ஆகமகிரியாஜோதி" "துவஜாரோஹணதுரந்தரர்"
"கிரியாக்கிரம் விஷாரத"
சிவஸ்ரீ. சதா. மகாலிங்கசிவக்குருக்கள் J.P.
(பிரதம குரு . அரசடிப்பிள்ளையார் ஆலயம்.
நாயன்மார்கட்டு)

## காஞ்சிப் பெரியவரின் ஆசி



சிவபக்தர்கள் வசித்த புண்ணிய பூமியான இலங்கை மாநகரின் வட பகுதியான யாழ்ப்பாணம், கோண்டாவிலில் வசிக்கும் தமிழ்மக்கள் அனைவரும் சேர்ந்து "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், கோபுரதரிசனம் கோடி புண்யம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதை உணர்ந்து தாங்கள் வசிக்கும் பகுதியில் ஆலயம் நிர்மாணம் செய்து அத்திருக்கோயில் விநாயகர் சுப்ரமணியன், சிவகாமி சுந்தரீஸமேத நடராஜசுவாமி நவக்ரஹம் முதலிய மூர்த்திகளைப் ப்ரதிஷ்டை செய்து இன்றுமுதல் மஹாகும்பாபிஷேகம் செய்து வழிபட இருப்பதையும் அதன் தொடர்பாக மலர்வெளியிட இருப்பதையும் அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று மலரும் மக்களுக்கு நன்கு பயன்படும்படி நறுமணத்துடன் அமைந்து ஸ்ரீ சிவகாமசுந்தரீஸமேத ஸ்ரீ நடராஜா சுவாமிகளின் அருளால் உலகமனைத்தும் ஸகலமங்களங்களையும் அடைந்து பாமக்ஷேமமாக வாழ வேண்டும் என்றும் ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி:
ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

## குறை நிவர்த்தி செய்யும் கும்பாபிஷேகம்

கோண்டாவில் அருள் மிகு சிவகாமி அம்மன் கோவிலுக்கு இன்று திருக்குடமுழுக்கு நடைபெறுகின்றது. கும்பாபிஷேகம் என்னும் சமஸ்திருதச் சொல்லினைத் தமிழிலே திருக்குடமுழுக்கு என வழங்கப்படும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை குடமுழுக்கு ஆலயங்களிலே நிகழுதல் வழக்கமாகவுள்ளது. தெய்வசக்தியை உருவாக்கவும், குறை குற்றங்களை நிவர்த்தி செய்யவும் இத் திருக்குடமுழுக்கு நிகழ்த்தப்படுகின்றது.

பல்வேறு வகையான பூஜைகள், ஹோமங்கள், பலி, சாந்தி முதலியனவற்றுடன் வேதகோஷங்கள், தேவாரத்திருமுறைகள், ஒலிக்க, மூலமந்திரம் இன்னொரு பக்கம் ஒலிக்க விம்பத்தின் சிரசிலே திருக்குடமுழுக்குச் செய்யப்படும். வாத்தியங்களும் பக்தர்களின் "அரோகரா" ஒலியும் இவ்வேளை ஓங்கி ஒலிக்கும். இவ்வேளை இறைசக்தி விம்பத்திலே குடிகொள்ளும்.

ஆலயத்தினுள் வீற்றிருக்கும் அருள்மிகு சிவகாமி அம்பாளைக் தொட்டு வணங்குவதற்கு இத்திருக்குடமுழுக்கு பக்தர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. பக்தர்கள் திருக்குடமுழுக்கு நடைபெறும் நாளின் முதல் நாளன்று அம்பாளுக்கு தமது கைகளால் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும்.எள்ளிலிருந்து பெறப்படும் நெய்யினை அம்பாளுடைய உடலிலே தம்முடைய கைகளாலே பூசும் போது, தெய்வமெய் தீண்டப்படுவதால் அடியார்கள் தம் குறை குற்றங்கள் நீங்கி துன்பத்திலிருந்து மீள்கின்றனர். பல ஆண்டுகளுக்கு ஒரு தடவை இவ்வாய்ப்பு அடியார்களுக்குக் கிடைக்கின்றது.

கோண்டாவில் அடியார்கள் சிவகாமி அம்பாளின் திரு மெய் தீண்டி எண்ணெய்க்காப்பிட்டு திருக்குடமுழுக்கினால் உயர்சக்தி பெறும் ஆலயத்தினாலும், அருட்சக்தி வழங்கும் அம்பாளின் அருளினாலும் பெருவாழ்வு பெற்று வாழ சிவகாமியின் திருவடிகளைப் பணிந்து வேண்டுகிறேன்.

பேராசியர். அ. சண்முகதாஸ்
தலைவர் / தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்


உங்கள் மங்கள காரியங்களுக்குத் தேவையான
அலங்காரப் பந்தல்கள் அமைத்திட
**கோபி அலங்காரப் பந்தல்**
தில்லையம்பதி
(C/34070) கோண்டாவில்.

உங்கள் இல்லங்களில் நிகழும்எல்லா விழாக்களையும் மற்றும் வைபவங்களையும் சிறந்தமுறையில் படம்பிடிக்க வேண்டுமா?
உடனே விரையுங்கள்
**உதயன் போட்டோ**
தில்லையம்பதி. கோண்டாவில்
(C/34061) T.P 0777-070746

உங்கள் இல்லங்களில் நிகழும் வைபவங்களுக்குச் சிறந்தமுறையில் பந்தல் அமைத்திட
யாழ் நகரின் முன்னணியாளர்கள்
**செந்தூரன் அலங்காரப்பந்தல்**
அரசடி வீதி. (ஆஸ்பத்திரி முன்பாக)
(C/36066) கோண்டாவில்.

புதுமை என்றால் அது புலவர்தான்!
டிஜிற்றல் முறையில்
படம்பிடித்திட
**புலவர் வீடியோ**
தில்லையம்பதி.
(C/36065) கோண்டாவில்.

சகலவிதமான ஒட்டு வேலைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்:
**கிசோக் வெல்டிங் வேர்க்ஸ்**
தில்லையம்பதி.
(C/36071) கோண்டாவில்.

நீர் இறைக்கும்
இயந்திர உதிரிப்பாகங்களுக்கு
நம்பிக்கையான ஒரே இடம்.
**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**
236. ஸ்ரான்லி வீதி.யாழ்ப்பாணம்.
(C/34064)

முற்றிலும் டிஜிற்றல் முறையில் படம்
பிடித்திட இன்றே நாடுங்கள்:
**முத்தொளி வீடியோ**
தில்லையம்பதி.
(C/36067) கோண்டாவில்.

உங்கள் மங்கள விழாக்களுக்குச்
சிறந்தமுறையில் பந்தல் அமைத்திட
**சியானா அலங்காரப் பந்தல்**
தில்லையம்பதி.
(C/36064) கோண்டாவில்.

சகல வாகனங்களுக்கும் தரமான
முறையில் சீற் கவர்கள் தைத்துப் பெற்றிட
**தில்லையம்பதி ரைதர் வேர்க்ஸ்**
ஆடியபாதம் வீதி.
(C/36072) திருநெல்வேலி.

டிஜிற்றல் முறையில்
புகைப்படம்பிடித்திட சிறந்த இடம்
**குகன் போட்டோ**
தில்லையம்பதி. கோண்டாவில்.
(புதிய கிளை -7.4.2004 இல்
(உரும்பிராய் சந்தியில் ஆரம்பமாகிறது)
(C/34068)

ஆண்கள், பெண்களுக்கான ஆடைகளைச்
சிறந்தமுறையில் தைத்துப் பெற்றுக்கொள்ள
**ஹரிகா தையலகம்**
ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.
T.P 077-7498261
(C/34062)

உங்கள் அனைத்து பிரதான தேவைகளுக்கும்
டிஜிற்றல் கமரா மூலம் படம் பிடித்திட
**பாலா வீடியோ**
தில்லையம்பதி.கோண்டாவில்.
(C/34063)

உதயன்

## தேர்தல் முடிவுகள்

இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் பெரும் வன்முறைகள் ஏதுமின்றி நடந்து முடிந்திருக்கின்றது. வாக்குகள் எண்ணும் பணி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தத் தேர்தலில் தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கிலும், பெரும்பான்மை சிங்களவர்களின் தென்னிலங்கையிலும் எதிரும் புதிருமான - ஒன்றுக்கொன்று முரண்பாடான - தீர்ப்புக்களை அந்தந்தப் பிரதேச மக்கள் அளித்திருக்கின்றனர்.

தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழரின் சுய நிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்தியும் -

ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை வெளிப்படுத்தியும் -

தேர்தலில் போட்டியிட்ட தமிழரசுக்கட்சி வேட்பாளர்களுக்கு மிகப்பெரிய வெற்றியை அளித்ததன் மூலம், தமிழர் தரப்பு தனது எதிர்பார்ப்பையும், ஒரு தலைமையின் கீழான தனது ஐக்கியத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

புலிகளின் தலைமையை இந்த வாக்களிப்பு மூலம் அங்கீகரித்ததன் வாயிலாக, கடந்த இரண்டு ஆண்டு காலமாக இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக ஐ.தே.முன்னணி அரசுடன் புலிகள் மேற்கொண்டுவந்த சமாதான முயற்சிகளை ஈழத்தமிழர்கள் அங்கீகரித்திருக்கின்றார்கள்.

ஆனால், இதற்குத் தலைகீழ் மாறான - முரணான - கருத்தை தென்னிலங்கை மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

ஈழத்தமிழர்களோடு அமைதி முயற்சி மூலம் சமரசத் தீர்வு காணமுயன்ற ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசைத் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் நிராகரித்திருக்கின்றார்கள்.

குறிப்பாக, தென்னிலங்கைச் சிங்கள பௌத்தர்கள் ஒன்று திரண்டு ஐ.தே.முன்னணியை ஒதுக்கித் தள்ளியதோடு, பேரினவாதப் போக்கில் அதிக நாட்டம் கொண்டுள்ள சக்திகளை - கட்சிகளை - அமோக வெற்றிபெற வைத்திருக்கிறார்கள்.

இதன்மூலம் கடந்த இரண்டு ஆண்டு காலமாக ரணில் விக்கிரமசிங்கவின் அரசு மேற்கொண்டு வந்த சமாதான முயற்சிகளை தென்னிலங்கை மக்கள் - குறிப்பாக பௌத்த சிங்களவர்கள் - நிராகரித்துப் புறம் தள்ளியிருக்கின்றார்கள்.

இத்தேர்தலில் ஒட்டுமொத்தமாக பௌத்த சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணியை ஆங்காங்கே சிதறிவாழும் சிறுபான்மையினர் தான் ஓரளவு தூக்கிப்பிடித்து நிறுத்தியிருக்கின்றார்கள்!

தமிழர் தரப்பின் ஐக்கியமும் ஏக தலைமைத்துவமும் ஒரே குரலில் இத்தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பது ஈழத்தமிழர்களுக்கு நிறைவைத்தருவதாகும். ஆனால், தமிழர்களோடு சமரச முயற்சியில் ஈடுபட்ட தென்னிலங்கை அரசு சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டு, பேரினவாதப் போக்கு சக்திகள் அந்த மக்களால் உயர்த்திப்பிடிக்கப்பட்டிருப்பது ஈழத் தமிழர்களுக்கு ஏமாற்றத்தையும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக அவநம்பிக்கையையும் தோற்றுவித்திருக்கின்றது.

இந்த நிலையில் -

ஜாதிக ஹெல உறுமய, ஈ.பி.டி.பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவற்றின் ஆதரவைப் பெற்றுத் தனது அணியின் ஆட்சியை நிலைநிறுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, அவ்வாறு ஓர் அரசை அமைத்த பின்னர் 'தேசிய அரசு' ஒன்றை ஸ்தாபிப்பதற்கு இணங்கி வாருங்கள் என்று ஐக்கிய தேசிய முன்னணிக்கு அவர் அழைப்பு விடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதற்கிடையில் -

இலங்கை முஸ்லிம்களும் தங்களின் பிரதிநிதித்துவத்தை - தலைமையை - இந்தத் தேர்தலின் மூலமாகத் தெளிவாக அடையாளம் காட்டியிருக்கின்றார்கள் என்றே கொள்ளவேண்டும்.

அத்தோடு, முஸ்லிம்களின் தலைமைத்துவம் தொடர்பாக இதுவரை நிலவிவந்த சர்ச்சைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பிரித்து வெளியேறி, வேறு அணியில் ஒன்றுதிரண்ட பல தலைவர்களை முஸ்லிம் மக்கள் ஓரளவு நிராகரித்து விட்டார்கள்.

அந்தவகையில், தனது தனித்துவத்தையும், தலைமையையும் முஸ்லிம் காங்கிரஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் நாடாளுமன்ற அட்சர கணிதத்தைச் சரிசெய்வதற்காக குதிரை ஓட்ட முயற்சிகளும் மும்முரமாக இடம்பெறும் என எதிர்பார்க்கலாம்.

மக்கள் ஒரு பக்கத்தில் கணக்குப் பார்த்தால் அரசியல் தலைவர்கள் தலைகீழாக கணக்குப் போடுவது எப்போதும் வழக்கம் என்பது இந்த நாட்டின் அரசியல் "வரன்முறையாகி"விட்டமை ஒன்றும் புதிதல்ல.

இந்த வகையில், இலங்கை அரசியலைப் பொறுத்தவரை அடுத்துவரும் நாள்கள் மிக முக்கியமானவையாக அமையப்போகின்றன என்பது நிச்சயம்.

# வடக்கு - கிழக்கில் பலம்பெற்ற தனிக்கட்சியாக கூட்டமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

இந்தமுறைத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் நான்கு மாவட்டங்களில் தமிழரசுக்கட்சி பெரும் வெற்றியீட்டி சாதனை படைத்திருக்கின்றது. தனிப்பெரும் கட்சியாக அது உருவெடுத்திருக்கின்றது.

யாழ். மாவட்டத்தின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களில் எட்டுப் பேர் தமிழரசுக்கட்சியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கட்சிக்கு மொத்தம் 2 லட்சத்து 57ஆயிரத்து 320 வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

18 ஆயிரத்து 612 வாக்குகளைப் பெற்ற ஈ.பி.டி.பி. ஓர் ஆசனத்தைக் கைப்பற்ற முடிந்திருக்கிறது.

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நான்குு மாவட்டங்களில் தமிழர் செறிந்துவாழும் பிரதேசங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 90 வீதமான வாக்குகள் தமிழரசுக்கட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரித் தேர்தல் தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்குகளில் தமிழரசுக் கட்சி 94.3 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இங்கு போட்டியிட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 3.8வீத வாக்குகளையும் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக்குழு 1 1.5 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

இராணுவக் கட்டுப்பாடற்ற கிளிநொச்சித் தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 98.7 வீதமான வாக்குகள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 95.8 வீத வாக்குகளையும் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி 2.8 வீத வாக்குகளையும் வீ.ஆனந்த சங்கரியின் சுயேச்சைக் குழு1 ஒரு வீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

கோப்பாய்த் தேர்தல் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக்கட்சி 90.8 வீத வாக்குகளையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 7.1 வீத வாக்குகளையும் ஆனந்தசங்கரியின் சுயேச்சைக்குழு I 1.5 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி வட்டுக்கோட்டைத் தொகுதியில் 91.9 வீத வாக்குகளையும் நல்லூர் தொகுதியில் 86.9 வீத வாக்குகளையும் யாழ். தொகுதியில் 87.7 வீத வாக்குகளையும் காங்கேசன்துறைத் தொகுதியில் 86.5 வீத வாக்குகளையும் மானிப்பாய் தொகுதியில் 84.4 வீத வாக்குகளையும் பெற்றுள்ளது. (ஐ-8)

# சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பாக 20 கிராமங்களில் கடனுதவித் திட்டம்

### உலக வங்கி உதவியுடன் 'நியாப்' நடைமுறைப்படுத்தும்

கோண்டாவில்,ஏப்.4

உலக வங்கியின் நிதியுதவியுடன் 'நியாப்' திட்டத்தின்கீழ் சுயதொழில் முயற்சிக் கடனுதவி வழங்கப்பட்டுவருகிறது.

இதற்கென குடாநாட்டைச் சேர்ந்த 20 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் -

வல்லிபுரம் (ஜே/416), இருபாலை தெற்கு(ஜே/257), இடைக்குறிச்சி (ஜே/341), வேலணை தென்கிழக்கு (ஜே/15), நவாலி தெற்கு (ஜே/136), பொன்னாலை (ஜே/170), காரைநகர் மத்தி (ஜே/48), சரவணை கிழக்கு (ஜே/20), புளியங்கூடல் (ஜே/60), மத்தொனி (ஜே/366), இமையாணன் மேற்கு (ஜே/359), அத்தாய் (ஜே/381), துன்னாலை மேற்கு (ஜே/374), துன்னாலை வடக்கு (ஜே/417), உடுப்பிட்டி தெற்கு (ஜே/354), உடுப்பிட்டி (ஜே/352) ஆகிய கிராமங்களில் கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டுவிட்டது என்றும் - கூறப்பட்டது.

கப்பூது (ஜே/382), புலோலி தெற்கு (ஜே/414), துன்னாலை தெற்கு (ஜே/370), குடத்தனை (ஜே/419) போன்ற கிராமங்களுக்கான கடனுதவி திருகோணமலையில் உள்ள திட்ட முகாமைத்துவப் பிரிவின் முன் அனுமதி கிடைக்கப்பெற்றதும் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட ஒரு கிராமத்துக்கு ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் முகாமைத்துவப் பயிற்சிக்கு 6 வீதமும் உள்ளீடுகள் வழங்குவதற்கு 94 வீதமும் செலவிடமுடியும்.

இந்த நிதிமூலம் சுயதொழில் முயற்சிக்கான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டது. (எ-49)

# பெரும் எதிர்பார்ப்புடன் தமிழர்கள் தேர்தலில் வாக்களித்துள்ளனர்

## இரா.சம்பந்தன் கூறுகின்றார்

இந்தத் தேர்தலில் தமிழ்மக்கள் பெரும் எதிர்பார்ப்போடு வாக்களித்திருக்கிறார்கள். - இவ்வாறு கூறினார் தமிழரசுக் கட்சியின் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சம்பந்தன்.

வாக்களிப்புத் தொடர்பாக பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது:- இந்தத் தேர்தலில் பெரியதொரு வெற்றியை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்துகூட மக்கள் பெருமளவில் வாக்களிப்பில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் இந்தத் தேர்தலில் பங்களித்திருக்கிறார்கள். வாக்களிப்பில் முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை. மக்களுக்கு முன்னால் நேர்மையான கொள்கைகளுடன் செல்ல இயலாதவர்களே தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுக்களைக் கூறுகின்றனர். அவர்களுக்கு நாம் எவ்வித முக்கியத்துவமும் அளிக்க வேண்டியதில்லை.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நோக்கியே எமது அடுத்த நகர்வுகள் அமையும். - இப்படி சம்பந்தன் கூறினார். (ஐ-9)

# தெற்கில் மூன்றாவது சக்தியாக உருவெடுக்கும் 'ஹெல உறுமய'

கொழும்பு,ஏப்.4

இந்தமுறை தேர்தல் முடிவுகளின்படி தெற்கில் பலம்பெற்ற மூன்றாவது அணியாக 'ஹெல உறுமய' அமைப்பு மாறியிருக்கின்றது.

சிங்கள அடிப்படைவாதக் கட்சியாகிய தேசிய ஹெல உறுமய சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவரும் பௌத்த மதத் துறவிகள் ஆவர்.

நாடு முழுவதும் வேட்பாளர்களை நிறுத்திய ஹெல உறுமயவுக்குப் பரவலாக வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

இதுவரை வெளியான முடிவுகளின்படி ஹெல உறுமயவுக்கு கிடைத்துவரும் வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது அக்கட்சி சார்பில் ஆறு அல்லது ஏழு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் தனித்துப்போட்டியிட்டு மூன்றாவது அணியாக ஜே.வி.பி. உருவெடுத்தது போன்று இம்முறை 'ஹெல உறுமய' தென்னிலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியாக மாறியிருக்கின்றது என்கின்றனர் அவதானிகள். (ஐ-3)

# கிழக்கிலிருந்து வருகின்ற தகவல்கள் கவலையளிப்பதாகக் கூறுகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,ஏப்.4

கிழக்கிலிருந்து வரும் தகவல்கள் தமக்குக் கவலையளிப்பதாகக் கூறுகிறார் ஈ.பி.டி.பியின் செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா. இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதாவது:-

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் வியாபாரம் மற்றும் தொழில் என்பவை காரணமாக நீண்டகாலம் வாழ்ந்து வரும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது மிகவும் கவலையடையச் செய்கின்றது. புலிகள் இயக்கத்தினுள் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளே இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணமாகும். புலிகளின் தலைமை தமக்குள் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்குச் சரியான தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் பண்பைக் கொண்டிருப்பதில்லை. புலிகள் தமக்குள் ஏற்படும் முரண்பாடுகளை அடக்கி அழித்துவிடும் அணுகுமுறையையே காலங்காலமாகப் பின்பற்றி வருகின்றனர். இப்போதும் கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைக் 'கருணா என்னும் தனிநபரின் குழப்பம்' என்றும் 'அந்நிய சக்திகளின் ஊடுருவல்' என்றும் கூறி திசை திருப்பிக் கருணாவைத் தனிமைப்படுத்தவும் அழிக்கவுமே திட்டம் தீட்டுகின்றனர். இது புலிகளின் தலைமை எடுக்கின்ற தவறான நிலைப்பாடாகும். இந்தத் தவறான நிலைப்பாடு தமிழ்பேசும் மக்களை ஒட்டு மொத்தமாகப் பாதிக்கக் கூடியதாகும்.

- என்றார்.

### நாளை

பங்குனி 23
திங்கட்கிழமை
(05.04.2004)
திதி : பூரணை
பகல் 5.19 வரை.
நட்சத்திரம் : அத்தம்
இரவு 7.21 வரை.
நான்காம் பங்குனித் திங்கள்
பூரணை விரதம்
சுபநேரம்: 12.08 - 1.38
ராகுகாலம்: 7.38 - 9.08
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வேலையை நேசி.
வாழ்க்கையை யோசி.

# யாழ். நகரப் பகுதியில் நேற்றும் பூரண அமைதி நிலை நிலவியது

யாழ்ப்பாணம்,ஏப்.4

தேர்தலையடுத்து யாழ். நகரப் பகுதி நேற்றும் வழமைக்குத் திருப்பாது மிகுந்த அமைதியான நிலையிலேயே காணப்பட்டது.

50 வீதமான வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டும் மக்கள் நடமாட்டம் அற்ற நிலையிலும் பூரண அமைதி நிலவியது.

போக்குவரத்துச் சேவைகளும் வழமையைவிடக் குறைவாகவே இடம்பெற்றன. நேற்றுச் சனிக்கிழமை விடுமுறை நாளானபோதிலும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு நடைபெறும் வியாபாரக் கெடுபிடிகள் அற்றநிலையில் கடைகள் யாவும்வெறிச்சோடி சோபையிழந்து காணப்பட்டன. (எ-15)

### தீர்த்தோற்சவம் காண்கின்றாய்!

வண்ணையில் கோயில் கொண்ட
~ வைத்தீஸ்வரனே!
எண்ணியோர் துன்பம் போக்கும்
~ வாலாம்பிகை நாதா!
பஞ்சரதப் பவனி வந்தாய்
~ வண்ணையில் நீ!
இன்று தீர்த்தோற்சவம் காண்கின்றாய்
~ வாலாம்பிகையுடன்.

- சரணியா

(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் தீர்த்தோற்சவம்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல இன Great Dane நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. சோடியாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30411)

தரமான Prima Broiler குஞ்சுகள, அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள 19.04.04 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவுசெய்யவும. பருத்தித்துறைக் கிளையிலும் பதிவுசெய்யலாம் தொடர்பு:19, முருகேசா ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரா வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(30412)

Sony பாவித்த 20" 21" T.V.கள் G21Q1 - G21 Q2 - 2197 National G-300 டெக் (Japan) Sony ரேடியோக் கசற் (200 Watts) என்பன மலிவுவிலையில் விற்பனைக்குண்டு தொடர்பு: R.மகேஸ்வரன், K.K.S. வீதி (சிறுவர்பூங்கா எதிரில்), மல்லாகம். (30433)

## வாடகைக்கு

தெஹிவளை காலி வீதிக்கு அண்மையில் அறைகள், தொடர் மனைகள் வாராந்தம், நாளாந்தம் வாடகைக்கு ஆண்கள், பெண்களுக்கு உண்டு. மேலும் சகல வசதிகளுடனும் ஆளுக்கு ஆள் 100/= வீதம் அறவிடப படும். தொடர்பு: தி.மஞ்சுளா T.P 2727864, 0722 - 949888. (30261)

யாழ்.கஸ்தூரியார் வீதியில் ராஜா தியேட்டருக்கும் கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்த நகைக்கடை 8½ x12 அடி குத்தகைக்குண்டு. வேறு பாவனைக்கும் உகந்தது. தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் T.P. 077 - 7374726. (30335)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப ஆசிரியை B.A. (Dip.In.Ed) (அத்தம்) 1968இல் பிறந்த மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. (அரச அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் தொழில் புரிபவர் விரும்பத்தக்கது) தொடர்பு: வி.இல 2212, மே/பா உதயன். (30399)

## தவறிவிட்டது

பலகாடு, காரைநகரைச் சேர்ந்த தேவராஜா குகதாசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.801821600V), விசேட அடையாள அட்டை, கடற்படை அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் (4007732362) என்பன யாழ்ப்பாணத்திற்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வேணி களஞ்சியம். 165, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் T.P. 021 222 2661, 021 222 2046. (30430)


**SKY COMPUTER SYSTEM**

109, KANDY ROAD, CHUNDIKULI, JAFFNA.
Tel./Fax No.: 021-4590325
கச்சேரிக்கு அருகில்

MS Office, Photo shop, Page Maker, Corel Draw, Hardware, Auto CAD, Internet & E-Mail, Computerised Accounting Packages, Visual Basic, C/C++ Programming.

Note:
1. மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியான முறையில் கவனிக்கப்படும்.
2. உங்களுக்கு வசதியான நேரத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.
- சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுத் தரப்படும்.

E-mail: sky com@ wow.lk
**Today you learn Tomorrow you lead.**
(24) (சி-34167)

**O/L DAY CLASS**

பிரிவு I ஆரம்பம்
05.04.2004
திங்கள் காலை 8.30 (பு.நே.)
★ மாதம் 40 மணித்தியாலம் கணித வகுப்பு நடைபெறும்.
★ கடந்த வருட பரீட்சையில் 90 சதவீத மாணவர்களைச் சித்தியடைய வைத்த ஒரே நிறுவனம்

**நாவலர்**
ஆனைப்பந்தி.
யாழ்ப்பாணம்
(30406) (40-21-14)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முதலியார் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்
இளைப்பாறிய நீதிமன்ற முதலியாரும் மொழிபெயர்ப்பாளரும் சிறந்த சமூக சேவையாளரும் ஆகிய

**திருவாளர் மு.சுப்பிரமணியம்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 22-03-2004 இல் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. K.அரியநாயகம் அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள், இனத்தவர்கள்.
(சி-34038)(21-14-34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அன்பு மாமா

**தெ.சுகுமார் அவர்கள்**

யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைத்துறையின் சித்திரமும் வடிவமைப்பும் (B.F.A.) பிரிவில் கடந்த 27-03-2004 சனிக் கிழமை நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றதை வாழ்த்தி மேன் மேலும் பல துறைகளிலும் பட்டம்பெற கல்வித்தாயை வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஜெ.நிதர்ஷனன், ஜெ.துர்க்கா, ஜெ.கீர்த்தனா, ஜெ.தாட்ஷாயினி, இ.ஷாத்வீகா, சு.சாதுர்யன், செ.சாமந்தி, செ.அபிராந்தன்.

"துர்க்கா பொடி வேக்ஸ்"
பரு./யாழ்வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.
(30410)(21-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

27.03.2004 அன்று இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில்
முகாமைத்துவமாணி என்னும் பட்டத்தைப் பெற்ற

**திரு.அ.ஆனந்தகணேசன் (B.B.A.)**

அவர்களைப் பாராட்டுவதோடு, அவர் மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அன்னை இல்லம்,
வன்னிச்சி அம்மன் கோயிலடி,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
060 221 2267, 021 226 3185.

அன்பு மாமா
**சோ.தண்டபாணிக தேசிகர்** J.P.
குடும்பம். (C/34233)(34)


## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும், விடுமுறையைக்கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள்இடம் "குட்டி இந்தியா" என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்து சென்றும் வாங்கலாம். மேலும் விவரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக *கைத்தொலைபேசி எண்.0065 97514941, தொலைநகல் 0065 64816144*

சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சில சமயங்களில் கஷ்டம். அதனால் 3கிழமைக்கு முதலில் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**
10,Anson Road# 15 - 14 International Plaza,
Singapore 079903
(26-21-14) (26954)

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்

**WESTEN UNION** பணப் பரிமாற்றம்

✱விரைவானது ✱பாதுகாப்பானது ✱நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும்
மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
- வங்கிக்கணக்கு அவசியமில்லை.
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

**THIRUMURUGAN COM NET**

T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E.mail:thirumurugan@eudoramail.com

46,ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச.முன்பாக)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்




உ

## மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய 4ஆம் பங்குனித் திங்கள் (பூரணை) பெருவிழா

*அம்பாள் அடியார்களே!*

05.04.2004 திங்கட்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 4மணி வரை நிகழும் இப்பெருவிழாவில் அம்பாளுக்கு விசேட அபிஷேகம், பூசை, வீதியுலா என்பன விமரிசையாக இடம்பெறும். ஆகவே, பக்தர்கள் அனைவரும் இவ்விழாவில் பங்குபற்றி அம்பாள் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

*குறிப்பு:* காலை 9மணி முதல் தமது சொந்த வாகனத்திலேயே ஆலயத்திற்குச் செல்ல படைத்தரப்பினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

வீணியவரை
இராஜராஜேஸ்வரி அம்பாள்
தேஸ்தானம், மாவிட்டபுரம். (30288)(26-14-21)

அ.துரைச்சாமி ஐயர்,
தர்மகர்த்தா.

## நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்





இந்து கலாசார சமய விவகார அலுவல்கள் அமைச்சின் அமைச்சராக இருந்து இந்துக்களுக்கும் ஏனையவர்களுக்கும் அரும்பணியாற்றிய

**உயர்திரு.தி.மகேஸ்வரன்**

அவர்கள், 27.03.2004 அன்று மாலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவம் அறிந்து மிகவும் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். இவர், பூரண சுகம் பெற்று, மீண்டும் தம்பணி தொடர இறை அருள் பெறவேண்டி ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொற்றாவத்தை,
செட்டிதரை
அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய நிர்வாகம்.
(30397) (24-21-14)


*நீங்கள்,*
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

**"மதுமேகரணி"**
**"MADHUMEAHAHARANEE"**

இந்த மருந்தின் பலாபலனைக் குறுகிகாலத்தில் அறிந்துகொள்ளலாம்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும்,
பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்
**சிவா நறுமணப்பூங்கா**
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.

*குறிப்பு:* சத்திரச்சந்திக்கு அருகில்


## புதுமனைப் புகுவிழா அழைப்பு





அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனி மாதம் 23 ஆம் திகதி (ஆங்கிலம் 05.04.2004) திங்கட்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 10.10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற

**பிரியா இல்லம்**

என்னும் புதுமனையில் பிரவேசம் செய்யத் திருவருள் கூடியுள்ளது. அவ்வேளையில் நடைபெறும் மங்கள நிகழ்வில் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகைதந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

பிரியா இல்லம்,
பொற்பதி வீதி, கொக்குவில்.

திரு.திருமதி பஞ்சநாதன் குடும்பத்தினர்
(வர்த்தகர்)
திருநெல்வேலி.

(30416)(34-21-14)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

# ஞானக்குழந்தை கல்விக்கழகம்

## சிவன் வீதி, திருநெல்வேலி.



ஆசிரியர் **வே.அன்பழகன்** அவர்களிடம்

எமது ஞானக்குழந்தை கல்விக்கழகத்தில் கல்விகற்ற மாணவர்களில் 2003ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



1. வி.விதுஷன் - 172 புள்ளிகள் (யாழ். மாவட்டத்தில் முதலாம் இடம்)
2. பே.ஜதுர்ஸ்சனன் - 171 புள்ளிகள் (யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடம்)
3. மி.மிதுறிகா - 169 புள்ளிகள் (யாழ். மாவட்டத்தில் ஆறாம் இடம்)

| | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 4. | சி.சுமிதா | 165 |
| 5. | உ.கவிந்தன் | 165 |
| 6. | ஆ.றோய்பானுசந்தர் | 164 |
| 7. | வெ.நாராயணி | 161 |
| 8. | இ.லமேரிகா | 161 |
| 9. | க.ஹிருஜிகா | 160 |
| 10. | த.சுஜீவன் | 160 |
| 11. | வ.கேசிகா | 159 |
| 12. | இ.வித்தகன் | 158 |
| 13. | சி.துஷானி | 158 |
| 14. | சி.அமுதீசன் | 158 |
| 15. | கு.பானுஜன் | 157 |
| 16. | ச.கஜலக்ஷ்ன் | 156 |
| 17. | பா.ஆரண்யா | 156 |
| 18. | உ.மேனாளனன் | 155 |
| 19. | சி.றகுராம் | 154 |
| 20. | ச.நிசா | 154 |
| 21. | மே.நீதினி | 154 |
| 22. | பா.கிருஷாந் | 153 |
| 23. | ஆ.பிரியந்தினி | 153 |
| 24. | த.ராகுல் | 153 |
| 25. | இ.கௌசன் | 153 |
| 26. | பா.பானுஜா | 153 |
| 27. | வீ.லக்ஷனா | 153 |
| 28. | க.கணபாலன் | 152 |
| 29. | செ.கமலாட்சன் | 152 |
| 30. | பா.ஜனார்த்தனசர்மா | 152 |
| 31. | ச.சாம்பவி | 152 |
| 32. | சி.கீர்த்தனா | 151 |
| 33. | அ.விமோசனன் | 151 |
| 34. | சி.கஜந்தன் | 151 |
| 35. | வெ.சுஜீவன் | 150 |
| 36. | வ.விவாஸ்கர் | 149 |
| 37. | தே.கோகிலசாந் | 148 |
| 38. | சு.டிலக்ஷனா | 148 |
| 39. | உ.சிந்துஜா | 148 |
| 40. | சி.கிஷோத் | 148 |
| 41. | நா.துளசிகா | 147 |
| 42. | செ.சுஜீவா | 147 |
| 43. | த.தர்சிகன் | 147 |
| 44. | மோ.விதுர்ஷனா | 146 |
| 45. | சி.தனுஜா | 146 |
| 46. | ஞா.சாருண்யா | 146 |
| 47. | வி.சுதந்தரி | 146 |
| 48. | கி.பஞ்சுகா | 146 |
| 49. | சு.கேத்திரி | 146 |
| 50. | இ.புனிதா | 146 |
| 51. | மோ.சஞ்ஜீவன் | 145 |
| 52. | சி.சஞ்சுதா | 144 |
| 53. | மு.நர்மதா | 144 |
| 54. | சி.தேனுகன் | 144 |
| 55. | ஆ.லோகானந்தன் | 144 |
| 56. | கி.விஷ்ணுகோபன் | 143 |
| 57. | இ.விசோபன் | 143 |
| 58. | நா.பிரியதர்சினி | 143 |
| 59. | சி.சவிதா | 143 |
| 60. | இ.நிருஜன் | 142 |

| | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 61. | த.தர்ஷிகன் | 142 |
| 62. | பி.செந்தாளன் | 142 |
| 63. | கு.சிவேந்திரன் | 141 |
| 64. | செ.நிவேதிகா | 141 |
| 65. | வி.சுகன்யா | 141 |
| 66. | கா.மந்தாகினி | 140 |
| 67. | இ.அனுசிதா | 139 |
| 68. | வி.பகீரன் | 139 |
| 69. | தி.ஜதிர்ஷன் | 139 |
| 70. | க.வைஷாலன் | 139 |
| 71. | சு.பவதாரணி | 139 |
| 72. | நா.நிருசா | 139 |
| 73. | சி.பிரசாந் | 138 |
| 74. | உ.விதூஷன் | 138 |
| 75. | ச.அபிநயா | 138 |
| 76. | க.சாயிசங்கர் | 137 |
| 77. | பு.வினோத் | 137 |
| 78. | ஜெ.கம்சானந்தி | 137 |
| 79. | சோ.துவாரஹன் | 136 |
| 80. | ச.கோபீதன் | 136 |
| 81. | சு.சிந்துபார்கவி | 136 |
| 82. | இ.நிருஷிகா | 136 |
| 83. | ஸ்ரீ.துவாரகன் | 136 |
| 84. | ப.குருபரன் | 136 |
| 85. | அ.கௌசிகன் | 136 |
| 86. | சி.அனோஜ்முத்துக்குமார் | 136 |
| 87. | யோ.சுபாஜினி | 135 |
| 88. | சி.சிந்துஜன் | 135 |
| 89. | தா.ஜெயடிலக்சன் | 134 |
| 90. | ர.கிருஷ்னேந்திரா | 134 |
| 91. | க.சுகேதா | 134 |
| 92. | உ.மிரோஜன் | 134 |
| 93. | ஜெ.குபேரகா | 133 |
| 94. | ஜெ.சங்கீதா | 132 |
| 95. | வ.நிலாஜனன் | 132 |
| 96. | சி.நரேந்திரன் | 132 |
| 97. | ஞா.மயூரன் | 132 |
| 98. | ஸ்ரீ.லக்ஷனா | 131 |
| 99. | சி.கிரிகரன் | 131 |
| 100. | க.துளசிகா | 131 |
| 101. | ஸ்ரீ.சர்மிலி | 131 |
| 102. | கி.காவேரி | 131 |
| 103. | வி.கிஷோபன் | 131 |
| 104. | நி.சுஜான்ஷியா | 131 |
| 105. | S.சர்மிளா | 131 |
| 106. | சி.திருமகள் | 130 |
| 107. | ப.தனோஜன் | 130 |
| 108. | செ.தேனுஷா | 130 |
| 109. | ப.சஜீவன் | 130 |
| 110. | அ.விறோஜா | 130 |
| 111. | பு.ரென்சி | 130 |
| 112. | க.கஜானி | 130 |
| 113. | சி.நிர்த்திகா | 130 |
| 114. | நா.விதுஷன் | 129 |
| 115. | த.ரகுநந்தனன் | 129 |
| 116. | சி.சஞ்சீவன் | 129 |
| 117. | க.துஷாயினி | 128 |
| 118. | த.மனோஜன் | 128 |

| | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 119. | மு.நந்தனன் | 128 |
| 120. | கோ.அபிலாஷினி | 128 |
| 121. | ச.நிசானிகா | 128 |
| 122. | தி.கோபிதாஸ் | 127 |
| 123. | ஆ.உமாசங்கர் | 127 |
| 124. | ஸ்ரீ.சனுசா | 126 |
| 125. | தி.வாகீசன் | 126 |
| 126. | செ.டக்சன் | 125 |
| 127. | இ.வசீகரன் | 125 |
| 128. | ப.வைகுந்தன் | 125 |
| 129. | ஜெ.விவேகா | 125 |
| 130. | ஜெ.சயந்தன் | 125 |
| 131. | இ.உமையாள் | 124 |
| 132. | சி.யதுர்சன் | 124 |
| 133. | க.சேவிதா | 124 |
| 134. | ச.பிரணவன் | 124 |
| 135. | உ.மதியழகன் | 124 |
| 136. | கு.பிரசாத் | 124 |
| 137. | ச.அரவிந் | 123 |
| 138. | சி.வினோயா | 123 |
| 139. | க.வைஷ்ணவி | 123 |
| 140. | இ.ஸ்ராளினி | 122 |
| 141. | தி.கலாரூபன் | 122 |
| 142. | கு.யதுபாலன் | 122 |
| 143. | ம.சுமித்திரா | 122 |
| 144. | அ.மதுவந்தி | 122 |
| 145. | பா.தேனுகா | 122 |
| 146. | அ.தாட்சாயினி | 122 |
| 147. | ஜெ.விதுஜா | 122 |
| 148. | வீ.உஷாயினி | 121 |
| 149. | பா.பவித்திரா | 121 |
| 150. | ஸ்ரீ.பிரசாந் | 121 |
| 151. | யோ.ஆதித்தன் | 121 |
| 152. | கே.யதீஷன் | 121 |
| 153. | தி.கம்ஷாயினி | 121 |
| 154. | தி.அகர்ஷன் | 121 |
| 155. | க.சபேசன் | 121 |
| 156. | கு.நிதர்சனா | 120 |
| 157. | சோ.சுஜீவா | 120 |
| 158. | கு.கௌதமன் | 120 |
| 159. | இ.யசிந்தன் | 120 |
| 160. | சி.சிந்துஜன் | 120 |
| 161. | ப.மயூரி | 120 |
| 162. | க.கஜேந்தினி | 120 |
| 163. | சௌ.முகேஷ் | 119 |
| 164. | அ.பார்த்தீபன் | 119 |
| 165. | பா.கிஷோனா | 119 |
| 166. | ம.கம்சவேணி | 119 |
| 167. | பா.கோபினி | 119 |
| 168. | மு.பவித்திரா | 118 |
| 169. | ம.வைஷ்ணவி | 118 |
| 170. | யோ.மயூரா | 118 |
| 171. | இ.ஸாயினி | 118 |
| 172. | செ.சுபானி | 118 |
| 173. | ப.சரண்யா | 118 |
| 174. | ப.நிருஷா | 118 |
| 175. | ச.சாய்கிருஷ்ணா | 118 |

### எமது கல்விக்கழகத்தில் மாதிரிப் பரீட்சைகளுக்கு மட்டும் தோற்றிய மாணவர்களில் சித்தியடைந்தோர்:

| | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 176. | மோ.திவ்வியபாரதி | 159 |
| 177. | செ.அர்ஜீன் | 159 |
| 178. | ப.சாருகா | 154 |
| 179. | சி.சுபாங்கன் | 152 |
| 180. | ப.மயூரி | 151 |
| 181. | ச.பக்தஜனனி | 150 |
| 182. | ந.விதூசன் | 147 |
| 183. | உ.பௌசிகா | 146 |
| 184. | இ.பிருதுவிராஜ் | 145 |
| 185. | கி.தனுஷன் | 144 |
| 186. | நா.புராதனி | 141 |
| 187. | ஸ்ரீ.சமித்திரா | 141 |
| 188. | இ.துசாந்தன் | 141 |
| 189. | கோ.ஸ்ரீநாத் | 139 |
| 190. | பி.ஸ்ரீபவன் | 139 |
| 191. | சி.நாராயினி | 135 |
| 192. | ம.மதீசன் | 133 |
| 193. | ஞா.கஜானனன் | 128 |
| 194. | கு.சபேசன் | 128 |
| 195. | வி.நிதூஷன் | 125 |
| 196. | த.பிரியந்தி | 124 |
| 197. | தெ.டிலக்ஷன் | 122 |
| 198. | பா.பாலினி | 122 |
| 199. | ஜெ.சஜீவன் | 120 |
| 200. | தி.சுதர்ஷினி | 118 |

இன்றைய பரிசளிப்பு விழாவில் பரிசில்களையும், பாராட்டுக்களையும் பெறும் இம்மாணவர்கள் எதிர்காலக் கல்விப் பாதையில் வளமான வெற்றிகள் பெற்றிட உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குறிப்பு: இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் பெற்றோர்களையும் மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-34059) (24-16-19)

**இயக்குநர், ஆசிரியர்கள், பெற்றோர்கள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



திருமதி **ஞானேஸ்வரி சேனாதிராஜா** (ஞானம்)

*(கொட்டடி, அம்மன் றோட், கந்தர்மடம்; தற்போது வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் விடுதி)*

**அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.**

எங்கள் இதயத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் நேரிலும், தொலைபேசியிலும், கடிதமூலமும் எமது துயரைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எங்களது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை (05.04.2004) திங்கட்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக்கிரியைகளிலும் (06.04.2004) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்:
இரகுநாதன (கனடா -மருமகன்).
யசோதரா
(மகள் – ஆசிரியை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)
பேரப்பிள்ளைகள்: பிரேமநாத்,
பிறேமானந், பத்மஜா.

தகவல்:
திருமதி யசோதரா இரகுநாதன்
6D, ஆசிரியர் விடுதி,
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்,
வவுனியா.T.P.:024 222 3711.

(C/34186)(34-19-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
07
–
09
–
1927



மறைவு
06
–
03
–
2004

திருமதி

## நடனசபாபதிப்பிள்ளை சிவகாமி அம்மா

(பஞ்சாட்சரம் வல்வெட்டித்துறை)

*அன்புடன் எமை வழிநடத்தி ஆதரவுக் கரம் நீட்டி*
*பண்புடன் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே*
*உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (05.04.2004) திங்கட்கிழமை அன்னாரது மகன் ந.சரவணபவா (வித்தனை ) இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்தில் (அந்தியேட்டி) பங்கேற்று ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இடம்:* வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

தகவல்:
ந.விநாயகமூர்த்தி
(மகன்).

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(30334)(34-19-16)


**தொலைத் தொடர்பு**

வெளிநாட்டு தொலைத் தொடர்புகள் மிகக் குறைந்த செலவில், கட்டணத்தில் செய்துகொள்ள தொடர்பு:
**0712 515605.** (30353)


**விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**அறிவித்தல்**

விடுமுறைக்காக ஒத்திவைக்கப்பட்ட விஞ்ஞானபீட மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் முனனர் அறிவிக்கப்பட்டபடி 19.04.2004 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படமாட்டாது. பதிலாக 26.04.2004 திங்கட்கிழமையே ஆரம்பமாகும்.

– பதிவாளர்.

(சி-34055)


**ஊடகமே உலகம்**
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
**DIPLOMA IN MASS MEDIA**
**தபால் மூலம்**
இக்கற்கைநெறியை மேற்கொண்டு
**Dip. in. M.M.(Sri Lanka)**
சான்றிதழை பெற்றுக் கொள்ளுங்கள்
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
**MMIC** 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,



**BARATHY**
**சித்தன்கேணி**
எது சிறந்த நிறுவனம், எங்கு திறமை மிக்க ஆசிரியர்கள் இவற்றைத் தெரிவுசெய்து விட்டீர்களா?
**A/L 2006**
கலை, வர்த்தகம்
**புதிய பிரிவு**
ஆரம்பம்:
05-04-2004
திங்கள் 3.00 p.m.
யாழ். நகர் ஆசிரியர் குழுவினால்

- பொருளியல் - வரதராஜன்
- கணக்கீடு - முகுந்தன்
- வணிகக்கல்வி - பசில்
- தமிழ் - பாலா
- இ.நாகரீகம் - சுரேஸ்
- அளவையியல் -R.P.சர்மா
- புவியியல் - குமரன்
- இந்துசமயம் - தரன்
- நாட.அரங். - சுதன்
- கிறிஸ்தவம் - வசந்தன்
- அரசியல் - றஜீவன்
- ஆங்கிலம் - நிஷாந்தன்

அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும் (30418)



**BARATHY**
**சித்தன்கேணி**
**O/L** DAY CLASS
நீங்கள் நன்கு அறிந்த பிரபல்யம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால்
**நாளை ஆரம்பம்:**
**திங்கள் காலை 8.00 மணி.**

- விஞ்ஞானம் - தேவா
- கணிதம் - எஸ்.சிவரூபன்
- தமிழ் - குகபரன்
  - தமிழ்மாறன்
- சமூகக்கல்வி - சுதன்
  - கோபாலன்
- ஆங்கிலம் - விஜயபாஸ்கர்
  - திலகர்
- சமயம் - தரன்
- வர்த்தகம் - லோகேஸ்வரன்
- தமிழ் இலக்கியம் - தமிழ்மாறன்

குறிப்பு:
சென்ற ஆண்டு போல் இம்முறையும் 90 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.


**விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## அறிவித்தல்

குறைநிரப்பு பட்டியல் I இன் கீழ் விஞ்ஞானபீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களை 2003/2004 ஆம் கல்வியாண்டுக்கான இதர முதலாம்வருட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுடன் இணைத்துக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்காக இம் மாணவர்களுக்கு ஏப்ரல் 15-17, 19-24 ஆகிய ஒன்பது தினங்களிலும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை எல்லாப் பாடங்களிலும் துரித பயிற்சி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, குறைநிரப்பு பட்டியல் I இன்படி அனுமதிபெற்ற மாணவர்கள் 10.04.2004 ஆம் திகதிக்கு முன் விஞ்ஞானபீட அலுவலகத்தல் தமது பாடச் சேர்க்கைகளைப் பதிவுசெய்துகொள்ளுமாறும் 15.04.2004 வியாழக்கிழமை முதல் கல்விச் செயற்பாடுகளுக்கு சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(C/34056)(34-19-16)

– பதிவாளர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
19
–
02
–
1978



இறப்பு
17
–
03
–
2003

## சிவேஸ் சின்னப்பொடியன்

(ஆசிரிய மாணவர், தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்)

அன்புக் கிளி பறந்தோடி
ஆண்டொன்று கடந்ததோ?
இதயத்தில் உன் நினைவு தணலாய்த் தகிக்க
ஈன்றவள் புலம்புகிறாள்!
உடன் பிறந்தோர் கலங்குகிறார்!
ஊரெல்லாம் உன் புகழ் ஓங்கியே ஒலிக்க
எளிமைக்கு உதாரணமாய்
ஏந்திழையே நீயிருந்து
ஐவருள் மாணிக்கமாய் நீ திகழ்ந்தாய்!
ஒன்றென்ன ஆண்டுகள் பலகடந்தாலும்
ஓயாது செல்வமே உன் நினைவு!

*சிறுப்பிட்டி கிழக்கு,*
*நீர்வேலி.*

என்றும் நினைக்கும்:
– குடும்பத்தினர்.

(30408)(34-19-16)

## 31 ஆம் நாள் நினைவலைகளும்
### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் நடேசன் இரத்தினகோபால்

*(விவசாய சம்மேளனத் தலைவர், முன்னாள் வெல்டர், காங்கேசன்துறை சிமெந்துக்கூட்டுத்தாபனம்)*

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
| --- | --- |
| 13-01-1934 | 05-03-2004 |

எங்கள் குடும்பத்தில் அன்பின் உருவமாகத் திகழ்ந்து எமையெல்லாம் நல்வழிப்படுத்திய குடும்ப ஒளிவிளக்கு அணைந்த செய்திகேட்டு ஓடோடிவந்து ஆறுதல்கூறியோருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து சிறப்பித்தோருக்கும் இரங்கலுரையாற்றியோருக்கும் துண்டுப்பிரசுரம் மற்றும் பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் தந்தி, தபால், தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்தோருக்கும் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


"வனஜா வாசா"
ஆனைக்கோட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை.

துயருடன் நினைவுகூரும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(30424)(34-16-)

# சித்தன்கேணி - கொட்டுக்கலட்டி சிறிமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேகம்



## பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசியுரை

ஆலயங்கள் மக்களின் ஆன்ம பலத்தை அதிகரிக்கச் செய்வதோடு, மக்களுக்கான உளவியல் பாதுகாப்பையும் தந்து நிற்பவையாகும். ஆரோக்கியமான சமூகத்தின் அசைவியக்கத்திற்கு ஆதாரமாக இருப்பவை ஆலயங்களாகும்.

இதையுணர்ந்த எம் முன்னோர்கள் கிராமங்கள், குறிச்சிகள் தோறும் ஆலயமியற்றி, மக்களின் ஆத்மீகத் தேவைகளை நிறைவேற்றி வைத்தனர்.

இவ்வகையில் சித்தன்கேணி, "கொடடுக்கலட்டி" என்னும் குறிச்சியில் அமைந்துள்ள இவ்வாலயமானது இன்று மஹாகும்பாபிேகம நிகழ்ந்து தேவஸ்தானமாக நிலைநிறுத்தப்படுகின்றது.

எல்லோரும் அன்னையவளின் அருள் மாரியில் நனைந்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஆசி கூறுகின்றேன்.

சிவாஹம கிரியாரத்தினம்
**கலாநிதி, சிவப்பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்,**
சங்கானை.

## சர்வசாதகாச்சாரியாரின் ஆசியுரை

### மஹா கும்பாபிஷேக தரிசனம் கோடிபுண்ணியம்

ஒருவன் தெரிந்து செய்கின்ற பாவங்கள் ஆலய தரிசனத்தாலும், ஆலய தரிசனத்தில் தவறு நிகழ்ந்தால் அது உற்சவ தரிசனத்தாலும் உற்சவ தரிசனத்தில் தவறு நேர்த்தால் அது மஹாகும்பாபிஷேக தரிசனத்தாலும் நிவர்த்தியாகும். அதனால்தான் மஹாகும்பாபிஷேகத்தை "பெரும்சாந்தி" என்கின்றனர்.

"பெரும்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்று திருமுறைகள் இதனைப் புகழ்கின்றன.

எனவே, அன்னைக்கு இன்று நிகழும் மஹாகும்பாபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டு சகலதும் பெற்று வாழ ஆசி கூறுகின்றேன்.

"ஸர்வசாதக சக்கரவர்த்தி" ஷடமர்சன அகோர சிவம்
**சாம்பசிவதாஷன் ஜெகதீஸ்வர சிவாச்சாரியார்**
அதிபர்.ஸ்ரீதேவி சபரி வேதாகம குருகுலம்.
.கொழும்பு. யாழ்.

**பூர்வாங்க வரலாறு:** இவ்வகையில் சித்தன்கேணியில் கோயில்கொணடு கொட்டுக்கலட்டி என்னும் குறிச்சியில் அருள்பாலித்துக்கொண்டிருப்பவள் அம்பாள். அம்பாளின் ஆலயமானது வீடு ஒன்றில் ஓர் அறையில் உற்பத்தியானதாகும். அம்பாளை தரிசித்து வந்த கிருஸ்ணர், வீரகத்தி, நாகமுத்து ஆகிய முன்னோர்கள் ஆதரித்து வழிபட்டு வந்தார்கள். அதன்பிறகு, மாணிக்கம் தர்மகர்த்தா அவர்கள் பூசைகளைச் செய்து வந்தார்கள். அதன் பிறகு நிர்வாகம் உருவாக்கி தம்பிமுத்து பரமசிவம் 19 வருஷமாக ஊர்மக்கள் எல்லோரும் ஒன்றாக அம்பாளின் பூஜைகளைச் செய்துவந்தார்கள். அதன்பிறகு ஊர்மக்களின் உதவியுடனும் ஆலயநிர்வாக அங்கத்தவர்களின் உதவியுடனும் இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து இப்போது விசாலமான ஓர் ஆலயத்தை அமைத்து இன்று அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இவ்வாலயத்தில் பரிபாலன மூர்த்திகள் பிள்ளையார், முருகன், வைரவர், காத்தவராயர் ஆகிய ஆலயங்களையும் அமைத்து இன்று மிகவும் புனிதமான நன்னாளில் கும்பாபிஷேகக்கிரியைகள் சீரும்சிறப்பாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**ஆலயபரிபாலன சபையினரும், தர்மகர்த்தாவும் ஊர்மக்களும்.**

(C/30421) (41-14-19)

AMPL
Quality Assurance



தரம் மிகு சமையற்கலையின் வடிவம்

ஒவ்வொருவருக்கும் சுவையான சமையலை அருந்த ஆசை. ஆனால் சுவையான சமையலை சமைக்க ஏன் தயக்கம். சுவையான சமையலை நீங்களும் சமைக்க, கையாள்வதற்கு இலகுவானதும் பாதுகாப்பானதும், இத்தாலியின் வடிவங்களையும் தொழில்நுட்பங்களையும் ஒருங்கே கொண்ட பிறஷர் குக்கர், பிளென்டர், ஃபூட் புரொஸசர், நொன் ஸ்டிக் பாத்திரங்கள் மற்றும் காஸ் குக்கர்கள் என்பனவற்றை காஞ்சன் உங்களுக்கு வழங்குகின்றது.




KANCHAN

ஒரு தரமான சமையல் அனுபவம்

pressure cookers, gas cookers, non-stickware, toasters, food processors, water filters

இலங்கைக்கான ஏக முகவர்கள்:
ஏசியன் மார்க்கட்டிங் பிறைவேட் லிமிட்டட்

12, ஹல்ஸ்டொப் வீதி, கொழும்பு 12. தொலைபேசி 2448226, 074-712557.
கிளை : 129, டாம் வீதி, தொலைபேசி : 2473358
நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்களிடமும் மற்றும் ஆர்பிகோ காட்சியறைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணத்துக்கான ஏகமுகவர்:

JAFFNA ELECTRICALS

141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 222 5766

06(94), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 222 2353



# யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில் மஹோற்சவம் - 2004

கொடியேற்றம் - 05.04.2004 திங்கள் ந.ப.12.00 மணி
பூசை நேரங்கள் - தினமும் உற்சவம் காலை 9.00 மணிக்கு
மாலை உற்சவம் 6.30 மணிக்கும் நடைபெறும்.
தேர்த்திருவிழா - 13.04.2004 (செவ்வாய்) காலை 9.00 மணி
தீர்த்தத்திருவிழா - 14.04.2004 (புதன்) காலை 9.00 மணி
வசந்தோற்சவம் - 15.04.2004 (வியாழன்) மாலை 6.00 மணி

மகோற்சவ குருக்கள் : சிவாசாரியமணி
**சிவஸ்ரீ நா.யோகேஸ்வரக்குருக்கள்.**

தெய்வீகப் பேருரைகள் : ஏப்ரல் 5ஆம், 6ஆம் திகதிகளில்
சைவப்புலவர் **திரு.இராசையா ஸ்ரீதரன்** அவர்கள்.
ஏப்ரல் 7ஆம், 8ஆம் திகதிகளில்:
சைவப்புலவர் ஆசிரியர் **திரு.கந்த.சத்யதாசன்** அவர்களாலும்
ஏப்ரல் 9 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை
"செஞ்சொற்செல்வர்" ஆசிரியர்
**திரு.இரா.செல்வவடிவேல்** அவர்களினாலும்
நிகழ்த்தப்படும்.

உற்சவ காலங்களில் தினமும் ந.ப.12.00 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள கணபதி கலாசார மண்டபத்தில் மகேஸ்வர பூசை பன் அன்னதான நிகழ்வு இடம்பெறும்.

*அன்பளிப்பு :-*
*நியூ பிரியங்கா நகை மாளிகை,*
*26, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.*

பிள்ளையாரின் பணியில்
நிற்கும்
**கோயில் நிர்வாகம்.**

(30414)(37-19-16-31)



# தேவை

*திவசரி பத்திரிகைகளை யாழ். மாநகர எல்லைக்குள் டிலிவரி செய்ய டிலிவரி பையன்கள் தேவை. துவிச்சக்கர வண்டி வழங்கப்படும்.*

*தேசிய அடையாள அட்டை மற்றும் கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் வேலை நாள்களில் காலை 8.30 – 10.30 மணிக்கு சமுகமளிக்கவும்.*

முகாமையாளர், கிளைக் காரியாலயம்,
எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்,
117, ஸ்ரேசன் றோட், யாழ்ப்பாணம்.
(30322)(16-19-31)



## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர்த் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

## சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகில்)
தொ.பே.இல.: 222 - 2567
(சி-29244) (24-13-16)


# கண்ணீர் அஞ்சலி

## முருகேசு கந்தஞானி
(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

எமது பிரதேச செயலக தட்டெழுத்தாளர் **செல்வி கௌரிதேவி கந்தஞானி** அவர்களின் பாசமிகு தந்தையார் முருகேசு கந்தஞானி அவர்கள் 02.04.2004 இல் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயர்பகிர்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம், வலி.மேற்கு,**
**சங்கானை.**

(C/34073)(34-19-31-16)

# முதலாமாண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
1940 - 06 - 14



தாயுமானர் அடியில
2003 - 03 - 17

## அமரர் சின்னத்தம்பி இரத்தினசிங்கம்
(புங்கன்குளம்)
திதி: சதுர்த்தசி

ஆண்டொன்று கழிந்தாலும்
அழுத விழிகள் ஓயவில்லை
தோன்றாத் துணையா இருந்து
எங்களைக் காத்து நிற்கின்ற குலவிளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் ஆத்மார்த்த அஞ்சலிகள்

175, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(30422)(26-19-16-31)

**மனைவி, பிள்ளைகள்,**
**குடும்பத்தினர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2004 இல் நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் முகாமைத்து வத்துறையில், பல்துறைத் திறமைக்கான 2003 ஆம் ஆண்டுக்கான **பேராசிரியர் ஏ.துரைராஜா நினைவு தங்கப்பதக்கத்தினையும்,** பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களுக்குமிடையிலான பல்துறையிலும் சிறந்து விளங்கும் ஒருவருக்கான பேராசிரியர் **ஏ.துரைராஜா நினைவு சிறப்பு** தங்கப்பதக்கத்தினையும் (Overall performance) பெற்ற,

## செல்வி
## செல்லையா குகாஜினி
## B.B.A.(Hons)

*(யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் - மாணவத்தலைவியும்)*

அவர்கள் மேலும் மேலும் பல சாதனைகளைப்பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி, வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**
செ.சந்திரசேகரம் குடும்பம் - கனடா.
செ.பஞ்சநாதன் குடும்பம் - ஜேர்மனி.
ஐ.சுரேந்திரராஜன் குடும்பம் - ஜேர்மனி.

(30394)(37-19-16-31)


ARPICO FURNITURE

# பிளாஸ்ரிக் கதிரைகள்

**இதோ!** உங்கள் இல்லத்தை அழகிய முறையில்
அலங்காரமான புதிய வடிவமைப்பில் ஒழுங்கமைத்து
வருவோரை "வணக்கம்" கூறி வரவேற்று அமர்ந்து உரையாட
அழகிய பல வடிவங்களில் ஆர்ப்பிக்கோ பிளாஸ்ரிக் கதிரைகள்
விற்பனைக்கு வந்துள்ளன
மற்றும் அனைத்துவிதமான தளபாடங்களும் !!

பிளாஸ்ரிக் கதிரைகள்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:**



## WOOD SONS



ஆர்பிக்கோ ஏகவிநியோகஸ்தர்:
68, 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் கடை சந்தி).
☎ 222 2430

(C/33732)(34-19-16-31)
மற்றும் அனைத்து ஆர்பிக்கோ முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
23 - 03 - 1940



மறைவு
17 - 03 - 2003

## அமரர் முத்துக்குமார் மயில்வாகனம்
*(கிராம சேவையாளர்)*

ஆண்டு ஒன்று ஆயிற்றோ அன்புள்ளம் மறைந்து
ஈண்டு உம்மை நினைத்தே இங்குநாம் வாழ்கிறோம்
மாண்டு நீர் போனதால் மனமும் கவலை கொண்டதே!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*5/5, அருளம்பலம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

(30336)(26-16-19-31)

*பிரிவால் துயரில் வாழும்:*
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

# முவிமொன்டா நிறுவனத்தினால் நுளம்பு வலைகள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,ஏப்.4

முவிமொன்டோ நிறுவனம், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட மிகவும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு சுகாதாரப் பொதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ், வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் சுகாதாரப் பொதிகளை வழங்கி வருகின்றது.


இப்பிரிவில் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள பண்டத்தரிப்பு, பிரான்பற்று, மாரீசன்கூடல், ஆனைக்கோட்டை, உயரப்புலம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு சுகாதாரப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நுளம்பு வலை, பிளாஸ்ரிக் வாளி, தகர வாளி உட்பட மற்றும் பல பொருள்களைக் கொண்ட பொதிகளே இவ்வாறு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இந்த நிறுவனம் பண்டத்தரிப்பு கிராம அலுவலர் பிரிவில் இரு பொதுக் கிணறுகளை ஆழமாக்கிப் புனரமைத்துக் கொடுக்கும் பணியிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

பண்டத்தரிப்பு தியான இல்லத்திற்கு அண்மையிலுள்ள பொதுக்கிணறு ஒன்றும், முல்லையடி வைரவர் ஆலயத்துக்கு அருகிலுள்ள பொதுக் கிணறு ஒன்றுமே தற்போது இந்த நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த இந்த முவிமொன்டோ நிறுவனம் ஐரோப்பிய யூனியன் வழங்கியுள்ள நிதி மூலம் இத்திட்டங்களை செயற்படுத்தி வருவதாக நிறுவன பிரதிநிதி ஒருவர் இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)



அன்பின் சகோதரிகளின் இல்லம் அண்மையில் மாதகல் பங்கில் திறந்துவைக்கப்பட்டது. யாழ். ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மேற்படி இல்லத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். மாதகல் பங்குத் தந்தை அருட்திரு. ஏ.சி.கிறிஸ்தோபரும் காணப்படுகின்றார். (படம்: மாதகல் செய்தியாளர்)

சாந்தைப் பாடசாலையில்

# சிரங்கு அறிகுறிகளுடன் 7 மாணவர் கண்டு பிடிப்பு

வலி.தென்மேற்கு,ஏப்.4

பண்டத்தரிப்பு சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரப் பரிசோதனையின்போது இங்கு கற்கும் ஏழு மாணவர்களுக்கு சிரங்கு நோய் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவர்களுக்கு பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இதற்கான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சாந்தை கிராமத்தில் சிரங்கு நோய் பரவிவருவதால் அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் பண்டத்தரிப்புப் பொதுச்சுகாதாரப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனைகளும வழங்கப்பட்டுள்ளதாகவும், தனிநபர் சுகாதாரத்தைப் பேணும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# அறநெறி மாணவருக்குச் சீருடை

யாழ். மாவட்டத்திலுள்ள இந்து அறநெறிப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு சீருடைத்துணி வழங்கப்படவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த வருட இறுதியில் தமது திணைக்களத்திடம் சீருடை வழங்குமாறுகோரி விண்ணப்பித்த அறநெறிப் பாடசாலைகளுக்கே தற்போது சீருடை வழங்கப்படவுள்ளதென்றும் அவர் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் கொழும்பு சென்று சீருடைகளை எடுத்துவருவதில் தாம் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் -

யாழ். செயலகத்தில் இயங்கும் இந்து கலாசாரத் திணைக்களத்தின் அலுவலகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அறநெறி ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சைவ சமய பாரம்பரியங்களை பேணி வளர்ப்பது இளைஞர் கடமை

## காரைநகர் உதவி அரச அதிபர் சொல்கிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.4

சைவசமயத்தையும், அதன் பாரம்பரியங்களையும் பேணிப்பாதுகாப்பது இளைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம்.

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவுவிழா கடந்த ஞாயிறன்று வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சைவசமயம் பல பாரம்பரியங்களைக்கொண்டது. அதன் பாரம்பரியங்களைப் பேணிப்பாதுகாப்பது அவசியமாகும்.

இளைய தலைமுறையினர் மத்தியில் சைவமரபுகள், பாரம்பரியங்கள் தொடர்பான முக்கியத்துவம் குறைந்து வருகின்றது.

இந்தநிலையில், சைவத்தையும் அதன் மரபுகளையும் பேணிப்பாதுகாக்க வேண்டியது எங்கள் இளைய தலைமுறையினரின் பணியாகிறது.

சைவத்தையும், தமிழையும் பேணும் போதுதான் அதன் மரபுகள் காக்கப்படும். இதன்மூலம்தான் தமிழர்கள் தமது தனி அடையாளங்களைம் பேணமுடியும். சைவத்தையும் அதன் மரபுகளையும் பேண சைவசமய அபிவிருத்திக்கழகம் போன்ற கழகங்களின் பணிமுக்கியமான பணியாகும்.

எமது சமூகத்தில் பல சங்கங்கள், கழகங்கள் பெயரளவில் செயற்படுகின்றன. அவை முழுமையாகச் செயற்படும் போது சைவம், தமிழ ஆகியன பாதுகாக்கப்படும் - என்றார். (எ-ரி)

# மனிதம் என்ற தேடலுக்குப் பதில்தரும் இறைமகன் யேசுவின் வாழ்க்கை

**செல்மர் எமில்**

மனித குலத்தின் மீட்புக்காக மண்ணில் உதிர்ந்த விண்ணக மலரின் வரலாற்றுச் சுவடுகளை - இருள்மூடிய உலகைத் தன் சிலுவைச் சாவினால் ஒளிரவைத்த இறைமைந்தனின் தியாகம் நிறைந்த அர்ப்பணிப்பை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஐந்து நாள்களுக்கு திருமறைக் கலாமன்றம் பிரதான வீதியிலுள்ள தனது மன்ற அரங்கில் இருநூற்றி ஐம்பதுக்கும் அதிகமான கலைஞர்களின் கூட்டிணைப்பில் 'காவிய நாயகன்' என்ற பெயரில் மேடையேறுகின்றது.

மனிதம் என்ற தேடலுக்குப் பதில் தரும் வகையில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கை அமைந்துள்ளது. அவர் தனது வாழ்வில் எதிர்கொண்ட சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுத்து 'மனிதம்' என்ற சொல்லுக்கு எடுத்துக்காட்டான வாழ்வை வாழ்ந்தார் என்பதைக் காவியநாயகன் பறைசாற்றுகிறது. இன்றைய உலகில் 'மனிதம்' என்பதன் அர்த்தமே மாறிப்போய் அதற்கு எதிர்மாறான வாழ்வை வாழும் மனித சமுதாயத்திற்கு இறைமகனின் வாழ்வு நிறையப்படிப்பினைகளை வழங்குகின்றது. இதனைக் 'காவியநாயகன்' ஊடாகக் கண்டுகொள்ளலாம்.

திருமறைக் கலாமன்றத்தால் இதுவரை அன்பில் மலர்ந்த அமரகாவியம், பலிக்களம், சாவை வென்ற சத்தியன், களங்கம், சிலுவை உலா, கல்வாரிப் பரணி, கல்வாரிக் கலம்பகம், கல்வாரிச் சுவடுகள், சிலுவைச் சுவடுகள், குருதி கழுவிய குவலயம், கல்வாரியாகம் உட்பட பல்வேறு பெயர்களில் பல்வேறு கோணங்களில் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்பட்டுள்ளது. இவற்றில் பலவற்றில் புதியபுதிய உத்திகள் கையாளப்பட்டதுடன் அந்த அந்தக் காலப்பகுதிக்குரிய சமகால நிகழ்வுகளும் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவை அனைத்துமே மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தன.



'காவியநாயகன்' ஆற்றுகை முதன் முதலாகக் கடந்த 2001ஆம் ஆண்டில் மேடையேற்றப்பட்டது. அப்போதிருந்த சூழலில் யாழ். குடாநாட்டு மக்கள் மட்டுமே இதனைப் பார்வையிட முடிந்தது. இம்முறை அனைத்துப் பிரதேச மக்களும் பார்வையிடுவதற்குரிய சூழல் ஏற்பட்டுள்ளமை சிறப்பானதாக அமைகின்றது.

இயேசுவின் திருப்பாடுகளை மக்கள் முன்பாக மேடையில் நிகழ்த்திக் காட்டும் திருப்பாடுகளின் காட்சி தோற்றம் பெற்றதற்கு வரலாற்றில் பல காரணங்கள் கூறப்படுகின்றன. மத்திய காலப்பகுதியில் கத்தோலிக்கத் திருச்சபையில் ஆராதனைகள் இலத்தீன் மொழியில் இடம்பெற்றன. அதனால் இவ்வழிபாடுகளில் பங்குபற்றிய மக்களுக்கு எதுவுமே புரியவில்லை. ஆகவே, திருப்பலிச் சடங்குகளில் 'குவாம் குவாறற்ரீஸ்' என்ற நாடகச் சடங்கு நிகழ்த்தப்பட்டது. இச்சடங்கிலிருந்து தோன்றிய மறைஞான நாடகங்களிலிருந்தே திருப்பாடுகளின் காட்சி தோற்றம் பெற்றது என்கிறார்கள் வரலாற்றாய்வாளர்கள். இதனை ஆண்டு தோறும் சில பங்குகள் மேடையேற்றியதால் மக்கள் யேசுவின் பாடுகளை அறிந்து தம் விசுவாச வாழ்வில் உறுதியாக இருக்க திருப்பாடுகளின் காட்சி உதவியது. இக்காட்சியை மக்கள் 'பாஸ்' என்றும் அழைக்கின்றார்கள். 'பாஸ்' என்பது 'பாஷ்ஷா' (Pascha) என்ற எபிரேய மொழியிலிருந்து உருவானது. அதாவது, இஸ்ரேலிய மக்கள் எகிப்தில் இருந்து விடுதலை அடைந்ததை 'பாஷா' என்று அழைப்பர். இதிலிருந்துதான் இச்சொல் உருவானது என்கிறார்கள். ஆனாலும், இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட அருள்திரு.பிலேந்திரன் அடிகளார் தனது ஆய்வில் தமிழில் 'பாஸ்கு' என அழைக்கப்படும் சொல் போர்த்துக்கேய மொழிச் சொல் என்றும் இது 'தியானத்திற்கான பயிற்சி' என்று பொருள்படும் (Pious Exercises) என்னும் சொல்லின் அடியாகத் தோன்றியது எனக் கூறியுள்ளார்.

திருப்பாடுகளின் காட்சி ஐரோப்பாவில் 15ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்த்தப்பட்டது. இலங்கையில் காலப்போக்கில் இது அறிமுகம் செய்யப்பட்டது. இதற்குக் காரணமாக இலங்கைக் கிறிஸ்தவ மக்கள் இயேசுவின் பாடுகளை மனிதர்களைக்கொண்டு நடித்துக் காட்டுவதை ஆரம்ப காலங்களில் விரும்பவில்லையென்று கூறப்படுகின்றது. இதனால்தான் ஆரம்பகாலங்களில் இலங்கையில் பொம்மலாட்டமாக இக்காட்சியை நிகழ்த்தி வந்துள்ளார்கள். இது 'உடக்குப் பாஸ்' என்று அழைக்கப்பட்டது. இந்த நிகழ்வு மன்னாரிலிலும் யாழ்ப்பாணத்தில் குருநகர், ஊர்காவற்றுறை, மாதகல், இளவாலை, பருத்தித்துறை, கிளாலி போன்ற இடங்களிலும் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. 'உடக்குப்பாஸ்' என்றும் மன்னாரில் வழக்கத்திலுள்ளது. மன்னார் பேசாலையில் இருநூறு வருடங்களுக்கு மேலாக இது தனித்துவமான கலையாகப் பேணப்பட்டு வருகின்றது.



யாழ்ப்பாணத்தில் திருப்பாடுகளின் காட்சியை முதன்முதலாக அறிமுகம் செய்தவர் அருள்திரு. லோங் அடிகளாவார். 1952இல் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஆங்கிலத்தில் இது மேடையேற்றப்பட்டது. பின்னர் 1954இலும் மேடையேற்றப்பட்டது. பின்னர் இப்பிரதி அருள் திரு. மரியாம்பிள்ளை அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இப்போது நாடக ஆசிரியர்களாக இருந்த எவ்பே. ஆம்ஸ்ரோங், கனகரட்ணம் ஆகியோரால் நெறியாள்கை செய்யப்பட்டு 1956, 1959ஆம் ஆண்டுகளில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலேயே மேடையேற்றப்பட்டது. பின்னர் இதன் பாணியிலேயே வேறு சில இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. ஆனால், இப்பிரதியை முதன்முதலாகத் தமிழிலேயே எமது மொழிக்கான தனித்துவத்துடன் எழுதி நெறியாள்கை செய்தவர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் ஆவார்.

இத்திருப்பாடுகளின் காட்சியில் பங்குகொள்வோர் அனைவருமே தம்மை மிகுந்த பணிவோடும் பக்தியோடும் அர்ப்பணித்து நிற்கின்றார்கள். வெறும் பொழுது போக்கிற்காக இதனைப் பார்க்காது பக்தி முயற்சியாகப் பார்வையிட்டுத் தியானிப்பது பார்வையாளர்களின் மிகப்பெரும் கடமையாகும்.

# அறநெறிப் பாடசாலைகளை முன்னேற்றுவதில் போதிய அக்கறை செலுத்தவேண்டும்

## உதவி அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

அறநெறிப் பாடசாலைகளை ஊக்குவிப்பதிலும், அவற்றை கிராமங்களில் புதிதாக நிறுவுவது தொடர்பாகவும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம்.

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலையின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் பாடசாலையின் தலைமை ஆசிரியை தலைமையில் நடைபெற்றது.

இந்தவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலமாக புதிதுபுதிதாக அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன.

ஆனால், அவற்றைத் தொடர்ந்து இயக்குவதற்கு பல்வேறு தேவைகளை நிறைவு செய்து கொடுக்க வேண்டிய கடமைப்பாடு உண்டு.

குறிப்பாக கற்றல், கற்பித்தலுக்குரிய நூல்கள், ஆசிரியர்களுக்கான வேதனம், மாணவர்களுக்கான சீருடை, பண்ணிசை கற்பித்தலுக்குரிய இசைக்கருவிகள் இன்னும் பல்வேறுபட்ட தேவைகள் அறநெறிப் பாடசாலைகளுக்கு உள்ளன.

ஆனால், அறநெறிப் பாடசாலைகளை உருவாக்குவதில் செலுத்தப்படும் அக்கறை அவற்றை தொடர்ந்து இயக்கவேண்டும் என்பதில் செலுத்தப்படுவதில்லை என்றே எண்ணவேண்டியுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தவேண்டும் - என்றார். (எ)

## மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

திருநெல்வேலி ஞானக்குழந்தை கல்விக் கழகத்தில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிமுதல் சிவன் வீதி, திருநெல்வேலியில் உள்ள கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரி.பி இராஜேஸ்வரன் திருமதி கௌரி இராஜேஸ்வரன் தம்பதியர் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். (எ)


விற்பனையாளர் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புபவர்களும் தேவை.

த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1. கே.கே.வீதி. யாழ்ப்பாணம்.

(30440)



பாராட்டி வாழ்த்துகிறோம்



International University For Martial Arts - Jappan பல்கலைக்கழகத்தினால் தகுதிகாண் சமய, சமூக சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி நிஷானந்தா ஜுவல்லறி உரிமையாளர்

திரு. அ. ஆனந்தன் அவர்கட்கு
(MR.A.Johnson Peter)

28.03.2004 இல் கொழும்பில் "கலாநிதி" (Doctor) பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். மேலும் பல பட்டங்கள் பெறவும் வாழ்வு வளம்பெறவும் அவரை வாழ்த்துகிறோம்.

இளைஞர் உருவாக்கல் இயக்கம்
யாழ்/மரியன்னை பேராலயம்.

(30395)(31-16-17)



SUBRA (14) கல்வி நிறுவனம்
சித்தன்கேணி - Gov - Reg

A/L 2006 பிரிவு II
ஆரம்பம்: 5.4.2004 (திங்கள்) 12.00 மணி.
எமது Supper Grade ஆசிரியர் குழு.

Eco. - ஜெயகுமார்
Com. - நந்தீஸ்
Acc. { தவா, சுபேசன்
Tam. - காந்தன்
Log. - E.S.பவன்
Hind. - ஸ்ரீஸ்
Drama- கணேஸ்
Geo. - ஐங்கரன்
Pol Sc. - முகுந்தன்
Hict. - வசி
Cri. - லிங்கேஸ்

Eng. - சுப்பிரமணியம்
Sts. - தவசேகர்
Phy. - வர்ணன்
Che. - தபேஸ்
C-Mat. - பிரதீபன்
Bio. - கஜன்

English- BRITTO
I.Q. - தவசேகர்

★ சங்கீதம்,நடனம்,சித்திர வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

பல்கலைக்கழக கல்வி உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உங்கள் பல்கலைக்கழக கல்வியை SUBRA தீர்மானிக்கும்.

(C/34150)(38-16-12)



COLLEGE OF KEEN
பலாலி வீதி O/L 2004 திருநெல்வேலி
DAY CLASS
ஆரம்பம்
05.04.2004 காலை 9 மணி

★சகல பாடங்களும் திறைமையான ஆசிரியர் குழுவால் போதிக்கப்படும்.

★எம்மிடம் கடந்தவருடம் கற்ற மாணவர்களில 85 வீதமானோர் சிறப்பாகச் சித்தியடைந்துள்ளனர்.

★கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும். தரம் 3 தொடக்கம A/L வரை அனைத்து பிரிவுகளும் நடைபெறு கின்றன.

மாணவர்களின் உயர்வே எமது நோக்கம்
- நிர்வாகி.

(30437)(37)



BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்

O/L DAY CLASS
(எமது வழமையான SUPER GRADE ஆசிரிய குழு)
ஆரம்பம்: 05.04.2004 திங்கள் காலை 8.00மணி

A/L 2006 ★கலை ★வர்த்தகம் ★கணித உயிரியல் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

(சி-34222)





இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இளையதம்பி வேலாயுதபிள்ளை

எல்லோர் இதயத்திலும் நீங்காது இடம்பெற்ற எங்கள் அன்புத் தெய்வமே! உங்களை இன்று நினைவுகூர்ந்து அமரராகி இருபதாண்டு நிறைவில் அஞ்சலி செலுத்துகின்றோம்.

துறையூர்
வேலணை.

திருமதி வே.சித்திரவாணி
(மனைவி) மற்றும் மக்கள்.
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

(30436)(34)



விக்னேஸ்வரா நகைப் பூங்கா
205/3,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021-4590022

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்:

10B
34D கந்தசாமி கோயில் வீதி,
வவுனியா.
T.P.0242221910
T.P.0242221857

காலி வீதி,
வெள்ளவத்தை
கொழும்பு 06.
T.P.:0112559535.

(30441)


# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு வடிவேலு (ஆச்சாரியார்)

காளிகோயிலடி, சங்கானையைச் சேர்ந்த கார்த்திகேசு வடிவேலு அவர்கள் நேற்று (03.04.2004) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்பு அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோவிலடி,*
*சங்கானை.*

(30439)(37-16-17-31)

தகவல்
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பி தங்கச்சிப்பிள்ளை

வடமராட்சி கிழக்கு, ஆழியவளையைச் சேர்ந்த சின்னத்தம்பி தங்கச்சிப்பிள்ளை நேற்று (03.04.2004) சனிக்கிழமை மரணமடைந்துள்ளார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சீனிப்பிள்ளை, பொற்கொடி ஆகியோரதும் காலஞ்சென்றவர்களான பொன்னாச்சி, சின்னக்குட்டி, முதலித்தம்பி, தெய்வானைப்பிள்ளை ஆகியோரது சகோதரியும் தியாகராசா (தலைவர், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், வடமராட்சி கிழக்கு), பரஞ்சோதி, தம்பித்துரை, பொன்னம்பலம் (தலைவர், புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம், வடமராட்சி கிழக்கு) ஆகியோரது அன்புத் தாயாரும் செல்லப்பாக்கியத்தின் சிறிய தாயாரும் இராசேந்திரம், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, அன்னபூரணம், சரஸ்வதி, அரியரஞ்சினி ஆகியோரது அன்பு மாமியாரும் ஜெயதேவி, ஜெயமலர், ஜெயலலிதா (டென்மார்க்), ஜெயரஞ்சன் (நோர்வே), ஜெயரஞ்சனா (லண்டன்), ஜெயசாந்தன் (லண்டன்), ஜெயசுதா, புஸ்பவதி (முகாமைத்துவ உதவியாளர், உடுத்துறை மகாவித்தியாலயம்), சிவகுமார் (லண்டன்), சிவநேசன் (மாவீரர்), சிவமனோகரி (போராளி), சிவாகரன் (லண்டன்), சிவானந்தன், விஜேந்திரன் (யாழ். பல்கலைக்கழகம்), யோகேந்திரா, சற்குணராசா (யாழ். மத்திய கல்லூரி மாணவன்), சன்ஜீகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி), சுவாதிகா (யாழ். ஆழியவளை மகா வித்தியாலயம்), [illegible]குமார் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஜீவிதா (யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை), தர்சாயினி (யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை), தனுசியா (யாழ். வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரது அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆழியவளையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. அவரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆழியவளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆழியவளை.*

(சி34236)(37-16-17-31)

தகவல்
சின்னத்தம்பி (கணவர்)
பிள்ளைகள்.

## திருமதி ஆன் இரத்தினம் பாலசிங்கம்

### (ஓய்வுபெற்ற ஆசிரியை)

நல்லூர் - நாயன்மார்கட்டு - வெயிலுகந்த பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொட்டகொட - அவிசாவலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆன் இரத்தினம் பாலசிங்கம் (முன்னாள் ஆசிரியை, சாதனா மகா வித்தியாலயம் - நல்லூர்) 02.04.2004 வெள்ளிக்கிழமை அவரது அவிசாவலை இல்லத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் நாகமுத்து பாலசிங்கம் (ஓய்வுபெற்ற அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தங்கம்மா நல்லையா, நேசமணி வீரகத்தி ஆகியோரின் இளைய சகோதரியும் திருமதிகள் இ.இராதிகா (அதிபர்), இ.பாலேஸ்வரி (ஆசிரியை), ஜோ.குகேஸ்வரி (ஆசிரியை), குகநேசன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் த.இரபீந்திரநாதன் (உரிமையாளர் - விமனு ஸ்ரோர்ஸ் - அவிசாவலை, பிராந்திய முகவர் - இல. காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), இராதாகிருஷ்ணன் (உரிமையாளர் - நியூ கிரவுண் ஸ்ரோர்ஸ் - அவிசாவலை), ஜோர்ஜ் (உரிமையாளர் - உதயம்ஸ், அவிசாவலை), திருமதி மேனகா குகனேசன் (ஆசிரியை), காலஞ்சென்ற த.மகேந்திரநாதன் (கனடா), த.பாலகுமாரநாதன் (உரிமையாளர் - பி.எல்.ஜி.கொம் - ஆனைக்கோட்டை) ஆகியோரின் மாமியாரும் லாவண்யா, விமல்காந், காருண்யா, விமன்யா, பார்த்தீபன், இராகுலன், கோகுலன், பிரணவன், பிறேம் ஜயந்த், சிறோம் ஜெயந்த், ஜெயந்தினி, லோகினி, கஜனி ஆகியோரின் பேர்த்தியும் திருமதி அற்புதமலர் மகேந்திரநாதன் (கனடா), திருமதி கி.கா.பாலகுமாரநாதன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சின்னம்மாவும் ஆவார்.

அன்னாரது இறுதி ஆராதனை இன்று (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அவிசாவலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(B.L.G. Comm. 2753)*
*ஆனைக்கோட்டை.*

(30443)(31-16-17)

தகவல்:
திரு. த.பாலகுமாரநாதன் .
(மருமகன்).

## தம்பு கந்தசாமி

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பு கந்தசாமி அவர்கள் நேற்று (03-04-2004) சனிக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான இளையவர் - மாணிக்கம் அவர்களின் அன்பு மருமகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிறீஸ்கந்தராணி (வவுனியா), புஸ்பராணி (வவுனியா), ரவந்திரராணி (வேலணை), பிறீமராணி (வவுனியா) ஆகியோரின் தந்தையும் தர்மலிங்கம் (வவுனியா), சண்முகம் (வவுனியா), சண்முகேஸ்வரராசா (வவுனியா), சிவநாதன் (தபால் ஊழியர், வேலணை அஞ்சலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டியாசினி, சிவடினேசினி, டிலூஜன், டிலாசினி, டினேசினி ஆகியோரின் அன்புப் பேரனும் வேலணை கிழக்கு கணபதிப்பிள்ளை - திருமகள் ஆகியோரின் அன்புச் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04-03-2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம்*
*வேலணை.*

தகவல்
க.சிவநாதன் (மருமகன்-
தபால் ஊழியர் அஞ்சலகம் வேலணை).

## திருமதி செல்லத்துரை பூமணி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பூமணி 01.04.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவியும் அன்னலெட்சுமி (கனடா), தருமராசா (ஓய்வுபெற்ற சிறாப்பர்) ஆகியோரின் சகோதரியும் அமிர்தகௌரி, காலஞ்சென்ற ரஜனி மற்றும் ராஜாஜி (கனடா), நளினி (ஆசிரியை,யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்), மாலினி, பவானி (லிகிதர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்), சொரூபி (பிரான்ஸ்), பாபுஜி (பொறியியலாளர், அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநாவுக்கரசு (சங்கத்தானை), சுமதி (கனடா), அகிலதாஸ் (அதிபர், யாழ்/கோப்பாய் மகா வித்தியாலயம்), உமாபாலன், திவாகா (சவூதி), புவனேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 4.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செம்பியன் வீதி,*
*கொக்குவில்.*

(30442)(37-16-17-31)

தகவல்
க.செல்லத்துரை (கணவர்).

மாத்தளையில் தேர்தல் முறைகேடுகளில்

# ஈடுபட்ட 65 பேர் விளக்கமறியலில் செவனகல குண்டு வீச்சில் ஒருவர் பலி!

மாத்தளை மாவட்டத்தில் தேர்தல் சட்டங்களை மீறிய 65 பேரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் நேற்றுமுன்தினம் இரவு மாத்தளை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களான இவர்கள் 65 பேரும் தேர்தல் தினத்தன்று வன்செயல்களில் ஈடுபட்டவர்கள் எனவும் - கள்ளவாக்களிப்பில் பங்கேற்றவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை -

நேற்று அதிகாலை செவனகலையில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் காயமடைந்த மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

# பிரதேச சபைத் தலைவர் ஒருவரும் சகாக்களும் ஆயுதங்களுடன் கைது!

உடபுஸ்ஸலாவை பகுதியில் தாக்குதலொன்றுக்காக சென்று கொண்டிருந்த பிரதேச சபைத் தலைவர் ஒருவர் உட்பட அவரது சகாக்கள் ஆறுபேர் நேற்று ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலீஸ் குழுவொன்றே இவர்களைக் கைதுசெய்துள்ளது. உடபுஸ்ஸலாவ பகுதியில் அரசியல்வாதி ஒருவரைத் தாக்குதவற்காக சென்றார்கள் என்று கூறப்படும் இந்த நபர்களிடமிருந்து கைத்துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று உடபுஸ்ஸலாவ பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி ரோகித வணிகசேகர தெரிவித்தார்.

நுவரெலிய நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# நேற்று மாலை...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதி - குளியாப்பிட்டிய
- ★ ஐ.ம.சு.கூ. - 29,878
- ★ ஐ.தே.மு. - 27,127
- ★ ஹெலஉறுமய - 3,413

தொகுதி - ஹிரியல
- ★ ஐ.ம.சு.கூ. - 26,607
- ★ ஐ.தே.மு. - 25,167
- ★ ஹெலஉறுமய - 2,740

தொகுதி - பொல்காவெல
- ★ ஐ.ம.சு.கூ. - 24,473
- ★ ஐ.தே.மு. - 20,435
- ★ ஹெலஉறுமய - 3,237

தொகுதி - பிங்கிரிய
- ★ ஐ.ம.சு.கூ. - 27,815
- ★ ஐ.தே.மு. - 24,120
- ★ ஹெலஉறுமய - 2,504

தொகுதி - நிக்கவரட்டிய
- ★ ஐ.ம.சு.கூ. - 29,545
- ★ ஐ.தே.மு. - 22,885
- ★ ஹெலஉறுமய - 1,427

தொகுதி : யாப்பகுவா
- ★ ஐ.ம.சு.கூ. - 37,155
- ★ ஐ.தே.மு. - 28,281
- ★ ஹெலஉறுமய - 1,387


**வினாத்தாள்கள்**

கொழும்பு, றோயல் கல்லூரியில் நடத்தப்பட்ட - G.C.E. A/L இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான - விஞ்ஞான, கணித, வர்த்தக வினாத்தாள்கள் விற்பனையாகின்றன.

பு.பாலசிங்கம் புத்தகசாலை.
யாழ்ப்பாணம். (30450)(38)

**வேலை ஆள்கள் தேவை**

1) சமையற்காரர்
2) சமையல் உதவியாளர்
3) றொட்டி மேக்கர்
4) சப்ளையர்
5) பில் கிளார்க்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
3 ★★★ Hotel ஹோட்டல்
162, Hospital Road, Jaffna.
T.P.: 021 222 3590 (C34238)(40)

**A/L 2006**
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்:
05.04.2004
திங்கள் மாலை 3.00 மணி
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.
(30446)(40)


கலைவாணி கல்வி நிலையம்
கோப்பாய்.
**O/L DAY CLASS**
ஆரம்பம்: 05.04.2004
(திங்கள் காலை 8.00 மணி)
★அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
- நிர்வாகி.
(C/34225)(40)

**எழுதுவினைஞர் தேவை**

விளம்பர நிறுவனம் (தனியார்) ஒன்றிற்கு எழுது வினைஞர் தேவை. ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். சுய விவரக்கோவையுடன் எதிர்வரும் 06.04.2004 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் 12.00 மணிக்குள் நேரில் வரவும். இருபாலாரும், எவ்வயதினரும் சமுகம் தரலாம்.

★ நேர்முகப் பரீட்சை பின்வரும் முகவரியில் நடைபெறும்.
200, T.K Tourist Inn,
Arasadi Lane, Palaly Road,
(30445)(38) Kandarmadam Juntion, Jaffna.

**நாகம்ஸ் சுன்னாகம்**
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R.ரஹ்மானின் இசையில்....
உதயா
தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (புதிய நேரம்)


(C-34180)

**C.C.A**
சுன்னாகம்
**A/L 2006**
கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 05.04.2004
8.00 a.m.
வழமையான ஆசிரியர் குழு
**O/L**
DAY CLASS
ஆரம்பம்: 07.04.2004
8.00 a.m. (30426)(38)

**பிறைற்றின் சாவகச்சேரி**
**A/L 2004**
பொருளியற் கருத்தரங்கு
ஏப்ரல் 7,9
8.30 a.m. - 3.30 p.m.
By: K. உதயன்
**A/L 2006**
வகுப்புகள் ஆரம்பம்
07.04.2004 புதன் 3.30 p.m.
O/L Day Class 05.04.04
8 a.m.
(30452)(40)

**நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்.**
**A/L 2006**
பௌதிகவியல்
பொறியியல்
By: M.கருணாநிதி
சனி 5 மணி.
(30377)(40)

**BRIGHTMAN**
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்.நகர்.
A/L 2006
பௌதிகம்
பொறியியல்
By.ஜெயசீலன்
ஆரம்பம் 05.04.2004
MON. 3.00 p.m
(30327)(40)

**லக்சுமி** இணுவில்
விஜய், தேவயானி
வடிவேலு, சூரியா
நடித்த
ப்ரெண்ட்ஸ்





காட்சிநேரம்:
11.00, 3.00, 6.30 (பு.நே.)
(30447)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
இன்று அஜித், சிம்ரன் நடித்த
உன்னைக் கொடு என்னைத் தருவேன் (புதிய)
காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
Maid in Manhattan
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
(C/33770)(12)

**ராஜா யாழ்ப்பாணம்**
இன்று முதல்
பிரபு, ரம்பா நடித்த
பந்தா பரமசிவம்
(சினிமாஸ்கோப்)
காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
(C/33519)(12)

**O/L DAY CLASS**
வகுப்புகள்
ஆரம்பம் : 05.04.2004
திங்கள் காலை
சுன்னாகத்தில் 8.00 மணி.
மல்லாகத்தில் 9.00 மணி.
ஸ்ரார் கல்வி நிலையம்
(30446)(40)

கொம்பியூட்டர்
பொலீமர்
இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு
யசோ,
35,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(30331)(38)


## நீங்காத நினைவில் நிலைத்து நிற்பவர்கள்

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னராசா சிவாகரன்

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னராசா கிருபாகரன்

எங்களுயிர்க்காதரவு உங்கள் துணை என்றிருந்தோம்
வந்தகடன் முடிந்ததென விதிவழியே சென்றுவிட்டீர்!
எங்கள் குலவிளக்குகளே! எமது அருமைச் செல்வங்களே!
எந்தப் பிறப்பெடுத்தாலும் உங்கள் நினைவு அகன்றிடுமோ?

*பிடாரிகோயிலடி,*
*கொக்குவில்.* (30449)(37-12-17)

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
வே.சின்னராசா குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மீனாட்சியம்மா இரத்தினசபாபதி



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சியம்மா இரத்தினசபாபதி நேற்று (03.04.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - வாலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சிவகாமசுந்தரி, நடராஜா, இரத்தினசபாபதி, ஆனந்தசபாபதி ஆகியோரின் சகோதரியும் கமலாதேவி மார்க்கண்டு, இரகுபதி (Retd. ASST Director Dept of Agriculture) காலஞ்சென்ற சாரதாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும் மார்க்கண்டு, நாகராஜா இராஜராஜேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், சுதர்சன் (இயக்குநர், கலாலயா பயிற்சியகம், யாழ்ப்பாணம்), அசோகன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜனகன் மற்றும் ஜீவகன் (கனடா), வதனி, கோமதி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வீணஜா, லக்சுமிஜா, விஷ்ணுஜா, சௌமிஜா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*108, அம்பலவாணார் வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.* (30451) (30-12-17-30)

தகவல்:
மா.சுதர்சன் (சுதன்).

## திருமதி பொன்னுத்துரை திலகமணி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை திலகமணி நேற்று (03.04.2004) சனிககிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை - சின்னம்மாவின் அன்பு மகளும் வைரமுத்து அன்னப்பிள்ளையின் அன்பு மருகளும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சிவபாக்கியம் மற்றும் மகேஸ்வரன், பரமநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் வில்லிமலர், பூமலர், இந்திராணி, இரத்தினசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிற்பாலன், சிவஞானம், நவரத்தினராசா, சிவரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகன்யா, மோகன்யா, அகல்யா, அகிலன், தினேஷ்குமார், நிரூஷன், சிகான், தேனுகா, றுவேதா, சுஜீவன் ஆகியோரின் பேர்த்தியும் பிரதீக்கா, வஷ்ணிக்கா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, இறுதிக்கிரியைகளுக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11/6, அரசடி வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.* (30454) (30-12-17-30)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி க.தடாதகைபிராட்டி

கருகம்பனை வீதி, கீரிமலையை வதிவிடமாகக் கொண்ட திருமதி க.தடாதகைபிராட்டி 02.04.2004 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரமலையின் அன்பு மனைவியும் க.உருத்திரமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர், வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு), க.விஜயநாகேஸ்வரன் (லண்டன்), க.குமாரதேவன் (பூசகர்), க.தயாபரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஓய்வுபெற்ற அதிபர் சொ.பசுபதிநாதனின் அன்புச் சிறியதாயாரும் சிவஞானேஸ்வரி, நீலலோஜனி, ராஜராஜேஸ்வரி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (03.04.2004) யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, இராமையாச் செட்டியார் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, கோம்பையன் மணல் மயானத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*ஆஸ்ப்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(30456)(38-12-17-30)

தகவல்:
க.உருத்திரமூர்த்தி,
க.குமாரதேவன்
(மகன்மார்).

# கொழும்பில் வெற்றிவாகை சூடினார் மகேஸ்வரன்!



கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே. முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் இந்துகலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் வெற்றிவாகை சூடியுள்ளார். 57,983 வாக்குகளைப் பெற்று ஆறாவது இடத்தில் அவர் வென்றுள்ளார்.

தமிழ்த் தேசியத்தை வலுப்பெறச் செய்வதற்காக வடக்கு அரசியல் வாழ்வைத் துறந்து கொழும்பு மாவட்டத்தில் அவர் போட்டியிட்டார்.

ஜிந்துப்பிட்டியில் கடந்த வாரம் அவர் பிரசாரத்தில் ஈடுபட்ட சமயம் இனந்தெரியாத நபர்களின் சூட்டுக்கு இலக்காகினார். அதன்பின் அப்பலோ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். பெரும்பாலும் இன்று ஆஸ்பத்திரியில் இருந்து அவர் வீடு செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்தம் உள்ள 20 ஆசனங்களில் 9 ஆசனங்களை ஐக்கிய தேசிய முன்னணி கைப்பற்றியது. 8 ஆசனங்களை சுதந்திரக் கூட்டமைப்புப் பெற்றது. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களில் விருப்பு வாக்குகள் எண்ணும் பணி நேற்று நள்ளிரவில் பூர்த்தியானது.

ஐ.தே.மு. சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க(3,24,425), மிலிந்த மொறகொட(99,145), ரவி கருணாநாயக்க(69,995), எம்.எஸ்.முஹமட்(62,951), பந்துலகுணவர்த்தன(58,460), மஹ்ரூப்(55,919), மனோ கணேசன்(51,608), காமினி லொக்குகே(43,810) ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர். (ஐ-3)

# வரலாறு காணாத அரசியல் பங்களிப்பு

## யாழ். மாவட்ட அரசியல்துறை அறிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.4

நேற்றுமுன்தினம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெரும் ஆதரவு வழங்கியமையானது தமிழ் மக்களின் வரலாறுகாணாத அரசியல் பங்களிப்பாகவும் விடுதலைப் போராட்டத்தின் புதிய வடிவமாகவும் விளங்குகிறது.

- இப்படித் தெரிவித்துள்ளது விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை. இது தொடர்பாக அது நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தியவாக்களர்கள் அனைவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பிலும், எமது தலைமைத்துவத்தின் சார்பிலும மனம் நிறைந்த பாராட்டுதலையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை மேன்மேலும் தமிழ் மக்களது விடுதலைப் பாதையில் அர்ப்பணிப்புடன சேவையாற்றவும், விடுதலைப் பயணத்தில் முன்னேறவும் மக்களின் இந்த அரசியல் பங்களிப்பு ஊக்குவித்துள்ளது. இதுவே மக்களது எதிர்பார்ப்புமாகும். அத்துடன், இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் மிகுந்த முக்கியத்துவத்தையும் இப்பங்களிப்புப் பெறுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாமும், எமது தலைமைத்துவமும் தமிழ் மக்களும் ஒரு புதிய உறுதிப்பாட்டுடன் உழைத்து எமது இலட்சிய இலக்கினை எட்டுவோம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

எமது தேசியத்தினையும், தாயகத்தின் மீதான பற்றுதலையும், எமக்குள்ள சுயநிர்ணய உரிமையையும் நாம் அனைத்துலகத்திற்கும் மீளவும் வலுவுடன் பறைசாற்றுவதற்கான சாதகமான வாய்ப்பினையும் தமிழ் மக்கள் உருவாக்கியுள்ளனர் - என்றுள்ளது. (ம)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ஹிஸ்புல்லாவின் கோரிகையை அடுத்து இருதடவைகள் மறுவாக்கு எண்ணும்பணி இடம்பெற்றது. இதனால், முடிவுகள் வெளியிடப்படுவது தாமதமாகியது.

வாக்கு எண்ணும் முறையில் தமது கட்சிக்கு ஆட்சேபம் இருப்பதாக ஈ.பி.டி.பி. முறைப்பாடு ஒன்றைச் செய்தது.

இந்த மாவட்டத்தில் ஐ.தே.கட்சி 5 ஆயிரத்து 10 வாக்குகளையும் ஈ.பி.டி.பி. 2 ஆயிரத்து 488 வாக்குகளையும் பெற்றன. (ஐ-21-3)

## ஈ.பி.டி.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை இருந்தது. எனினும் இறுதி நேரத்திலேயே ஈ.பி.டி.பி ஓர் ஆசனத்தைப் பெறும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தச் சிக்கல் தொடர்பாக கூட்டமைப்பு வேட்பாளர்கள் யாழ். தெரிவத்தாட்சி அதிகாரியுடன் நேற்றுப் பேச்சு நடத்தினர்

வாக்கு கணக்கெடுப்பின் போது நிராகரிக்கப்பட்ட வாக்குகள் மீள எண்ணப்படவேண்டும் என்று கூட்டமைப்பு வேட்பாளர்கள் கடிதம் ஒன்றைத் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு கையளித்தனர்.

எனினும் அக்கடிதத்தை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிய யாழ். தெரிவத்தாட்சி அதிகாரி யாழ். மாவட்ட முடிவுகளை உத்தியோக பூர்வமாக அறிவித்தார். (ம-3)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

வயிற்றுப் பகுதியில் ஆழமான காயங்களுடன் காணப்பட்ட இளைஞன ஒருவனின் சடலம் நேற்றிரவு ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சடலம் தமிழக மீனவரான பால சுப்பிரமணியம் சர்வேஸ்வரா என்ற இளைஞனுடையது எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ம-9-6-ரி)

### மீள் பிரசுரம்

பொதுத் தேர்தலை முன்னிட்டு நேற்று மாலை 'உதயனின்' விசேட பதிப்பு வெளியானது. அதில் இடம் பெற்றிருந்த செய்திகள் சில இன்றைய பதிப்பில் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன.

## வன்னியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறை வெற்றி பெற்றவர்களான நூர்தீன் மசூர், ரிஷாத் பதியுதீன் ஆகிய இருவரில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகக்கூடும்.

விருப்பு வாக்குகள் குறித்த உத்தியோகபூர்வ முடிவுகள் இன்றே வெளியிடப்படும். (ம-164)

## முடிவுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக கண்டி, திகாமடுல்ல மாவட்டங்களில் இருந்து வாக்குச் சாவடிகள் தொடர்பான அறிக்கைகள் தனக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

முடிவுகள் அறிவிக்கும் பணி இடை நிறுத்தப்பட்டபோதும் விருப்பு வாக்குகளை எண்ணும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

மொத்தமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 10 மாவட்ட முடிவுகளே நேற்று மாலைவரை அறிவிக்கப்பட்டன. ஏனையவை இன்று அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ம-6)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் திகாமடுல்ல மாவட்டத்திலும் தென்பதியில் சில வாக்களிப்பு நிலையங்களிலும் வடக்கு வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றிலும் சட்ட மீறல்கள், ஆள் மாறாட்டம், வாக்குப்பெட்டிகளில் கள்ள வாக்குக்கள் திணிக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் பற்றித் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்விடங்களில் மீண்டும் வாக்களிப்பு நடத்தப்படவேண்டுமா அல்லது அதற்கு அவசியம் இல்லையா என்பதை தீர்மானிக்கும் பொருட்டு பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் செயலாளர்களுடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக இன்று கூட்டம் நடத்துகிறார் தேர்தல் ஆணையாளர். (ம-க)

# மக்களுக்கு நன்றி கூறுகிறார் தமிழரசுக் கட்சிச் செயலாளர்

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வாக்களித்த 90 வீதமானவர்கள இலங்கைத் தமிரசுக் கட்சிக்கு வாக்களித்து கட்சியைப் பெருவெற்றி பெற வைத்ததையிட்டு கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சோ.சேனாதிராசா மக்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2004ஆம் ஆண்டு 02ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் தமிழத தேசிய இனத்தைப் பொறுத்தவரை மிக முக்கியமானதென்பதைத் தமிழ்தேசிய இனம் ஏற்றுக்கொண்டிருந்தது.

தமிழ்த்தேச மக்கள் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் அடிப்படையில் தங்கள் தாயகத்தில் தம் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக இத்தேர்தலில் வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருந்தது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தையும் அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டையும் அங்கீகரித்து வாக்களிக்குமாறும் கேட்டிருந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இத்தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாகவே ஆதரித்துப் பிரசாரத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையையும் எமது வேண்டுகோளையும் ஏற்றுப் பெருமளவில் குறிப்பாக யாழ். தேர்தல் மாவட்டத்திலும் 90 வீதமான வாக்குகளை இலங்கைத் தமிழரசுக் கட்சிச் சின்னமான வீட்டிற்குக்குவித்து மாபெரும் வெற்றி பெறவைத்துள்ளமைக்கு எம் தமிழ் மக்களுக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## பல லட்சம் கூடுதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் என்ற யதார்த்தத்துக்கும், தமிழினத்தின் இடைக்கால தன்னாட்சிச் சபைக் கோரிக்கைக்கும் கிடைத்த அங்கீகாரம் என்று கருத்தப்படுகிறது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அர்ப்பணிப்புடன் ஈடுபடும் ஆட்சிக்கு ஆதரவு அளிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருக்கிறது.

பிரதமர் ரணிலின் ஐக்கிய முன்னணி அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டது. அதற்காகத் தமிழ்க் கூட்டமைப்பு முன்னைய நாடாளுமன்றத்தில் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆதரித்தது.

இம்முறையும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அமைத்து சமாதானப் பேச்சுகளை முன்னெடுத்துச் செல்லும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை தேர்தலில் தனித்தும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தும் போட்டியிட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் இரு கட்சிகளும் செய்து கொண்டுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் தவிர, அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேர்ந்தே தேர்தலில் போட்டியிட்டது.

அமைச்சர் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் நுவரெலியா மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்டது தவிர கொழும்பு ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேர்ந்தும் போட்டியிட்டது.

எனவே, தமிழத் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணிக்கு உண்டு.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு சுதந்திரக் கூட்டமைப்பை விடச் சற்றுக்குறைவான எண்ணிக்கையில் நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைத்தாலும் ரணில் விக்கிரமசிங்க மற்றக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியை அமைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆட்சி அமைப்பதற்கு ஆகக குறைந்தது 113 ஆசனங்கள் தேவை. சுதந்திரக் கூட்டமைப்பு கூடுதலான வாக்குகளுடன் முன்னணியில் நின்றாலும் அதற்குத் தனியாக ஆட்சியை அமைப்பதற்கு வேண்டியளவு ஆசனங்கள் கிடைப்பது சாத்தியமில்லை. வேண்டுமானால், ஜாதிக ஹெலஉறுமயவின் ஆதரவைக் கோரலாம். அதற்கு சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதம பங்காளியான ஜே.வி.பி. விடாது. இரண்டு இனவாத இடதுசிக் கட்சிகளுக்கும் ஒருபோதும் ஒத்துவருவதில்லை.

இந்தக் காரணங்களாலேயே ஐக்கிய தேசிய முன்னணியை விடக் கூடுதலான ஆசனங்களைச் சுதந்திரக் கூட்டமைப்பு வென்றாலும் அந்தக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

இரண்டு கட்சிகளாலுமே தனியாகவோ மற்றவர்களின் ஆதரவுடனோ ஆட்சி அமைக்க முடியாத நிலைமை தோன்றுமானால் இரண்டு கட்சிகளும் பரஸ்பரம் இணங்கித் தேசிய அரசாங்கம் அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு முன்பெல்லாம் முயற்சி செய்தவர் ஜனாதிபதி. அவர் இப்போது தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றித் தீவிரமாகச் சிந்தித்து வருகிறார் என்று அவருக்கு நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஆனால், தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க உடன்படுவாரா என்பதுதான் கேள்வி.


மில்லெனியம் உயர் கல்விக்கழகம்
(கைதடிச் சந்தி, கைதடி)
A/L 2006 கலைப் பிரிவு
O/L DAY CLASS
பிரிவு II
ஆரம்பம்: 05.04.2004
திங்கள் காலை 8 மணி.
(30423)

CHEMISTRY CENTRE
Temple Rd நல்லூர்
A/L 2005
INORGANIC
Tue., Fri. 3 - 4 P.m.
A/L 2006
GENERAL
Mon., Fri. 5.30 - 6.30 P.m.
By: அன்பழகன்
(C/34257)(38)

வலி. மேற்கு மாணவ மணிகளே!
நாளை ஆரம்பம்
O/L DaY
வகுப்புகள் ஆரம்பம்:
05.04.2004 [திங்கள்] 12.00 மணி
எம்முடன் இணைந்தோர் கல்வியில் வெற்றி பெறுவர்.
SUBRA (14)
சித்தன்கேணி.
(C/34149)(40)

O/L DAY CLASS
ஆரம்பம்: 05.04.2004
திங்கள் 8.30 [மு.நே]
எமது வழமையான SUPER GRADE ஆசிரியர் குழு
★கணிதம் MR.S. செந்தூரன்
★விஞ்ஞானம் MR.சங்கர்வாமன்
★சமூகக்கல்வி MR.E.A.ஜெயன்
★தமிழ் MR.M.பகீரதன்
★ஆங்கிலம் MR.A. பாலேந்திரா
★சமயம் MR.B. மயூரன்
★விவசாயம் MR.T. சுதர்சன்
★வர்த்தகம் MR.M.யுவராஜ்சிங்
▶ மாதத்தில் 40 மணித்தியாலம் கணித வகுப்பு நடைபெறும்.
▶ கடந்த வருடம் பரீட்சையில் 90 சதவீத மாணவர்களை சித்தியடைய வைத்த ஒரே நிறுவனம்.
நாவலர்
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
(C/34058)(40)

MATHS CENTRE
M.M.V. Road, Nelliady
A/L 2006
புதிய பிரிவு
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 05.04.2004
நேரம் பி.ப. 3.00 (ப.நே.)
திங்கள்.
வழமையான ஆசிரியர் குழு
தரம் 4 - தரம் 11 வரையிலான இரண்டாம் தவணைக்கான வகுப்புகள்.
ஆரம்பம்: 05.04.2004 (திங்கள்)
நேரம்: பி.ப. 3.30 (ப.நே.)

ஈசன் கல்வி நிலையம்
A/L 2006 புதிய பிரிவு
வர்த்தக, கணித உயிரியல் வகுப்புகள்
எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகிறது.
காலம் : 05.04.2004
(Mon.) மாலை 3.30 மணி.
குறிப்பு – அனைத்துப் பாடங்களும் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்.
O/L DAY CLASS
ஆரம்பம்: 05.04.2004
திங்கள் 8 மணி
(வழமையான ஆசிரியர் குழு)
(30378)(40)

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது
றோல்ஸ் றொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை - 011 2 360290, 2 360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை 'நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.